# செயலாற்றுகை அறிக்கை – 2018

வெளியீடு

திட்டமிடல் பிரிவு

வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு

இரண்டாம் மாடி,

“செத்சிறிபாய”, பத்தரமுல்லை

## கௌரவ அமைச்சரின் செய்தி



2018 ஆம் ஆண்டு மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட கம் உதாவ (கிராம எழுச்சி) திட்டத்தின் கீழ் தேசிய வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்திய நான்காவது ஆண்டாகும். 03 வருட வீடமைப்புமயமாக்கலின் சிறந்த அம்சங்களை பிரபல்யப்படுத்தி தேசிய வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்துக்கு கூடுதலான வளங்களை ஒன்றுதிரட்டிக் கொள்வதற்கும், உயர் விளைதிறன்மிக்க நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தவும் முடியுமான ஆண்டாக இது வரலாற்றில் பதியப்படும்.

திறைசேரியினால் மாத்திரம் ரூ.மி. 9535 ஆன ஏற்பாடுகளை ஒதுக்கிக் கொடுக்கும் போது இந்திய அரசினால் மேலும் ரூ.மி. 600 ஆன ஏற்பாடுகளை பெற்றுக் கொடுத்து 2018 ஆம் ஆண்டில் பாரிய வீடமைப்புமயமாக்கல் இலக்கை பூர்த்தி செய்துகொள்ள எமக்கு முடியுமாயிற்று. 2020 ஆம் ஆண்டளவில் 2500 மாதிரிக் கிராமங்களை ஆரம்பிக்கும் இலக்கை இலகுபடுத்தும் வகையில் 1415 மாதிரிக் கிராமங்கள் எனும் இலக்கு அடையப்பெற்றுள்ளது. இந்த ஆண்டில் மாத்திரம் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட மாதிரிக் கிராமங்களின் எண்ணிக்கை 905 ஆகும்.

2018 ஆம் ஆண்டு வரை புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 148 மாதிரிக் கிராமங்கள் பயனாளிகளான சமுதாயத்திற்குப் பெற்றுக் கொடுக்கும் ஆற்றல் கிடைத்ததுடன், செவிப்புலனற்ற ஆட்களைக் கொண்ட 34 குடும்பங்களுக்கு வீரவில பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட நயனாலோககம இவற்றில் விசேடமானதாகும்.

மேலும், அரசாங்க ஊழியர்கள், உள்நாட்டு மருத்துவர்கள், ஆசிரியர்கள், விளையாட்டு வீரர்கள், ஊடகவியலாளர்கள், இளைஞர்கள், யுவதிகள், கலைஞர்கள் என்ற வகையில் பல்வேறு சமுதாயத்தினரை உள்ளடக்கிய சமூக அமைப்புக்களில் வீடமைப்புச் சிக்கலைத் தீர்ப்பதற்கு தேசிய வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தை வழிநடாத்தும் ஆற்றல் 2018 ஆம் ஆண்டில் வெளிப்படுத்தப்பட்டது.

தேசிய வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டமானது முழு நாட்டையும் உள்ளடக்கும் வகையில் அனைத்துப் பிரதேசங்களிலும் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில் மாதிரிக் கிராமம் மற்றும் விசிறி உதவி ஆகிய இரண்டு நிகழ்ச்சிததிட்டங்கள் ஊடாக வட மாகாணத்தில் 5110 குடும்பங்களுக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் 7077 குடும்பங்களுக்கு வீடமைப்புப் பயன்களைப் பெற்றுக் கொடுக்க முடிந்ததை விசேடமாகக் குறிப்பிட விரும்புகின்றேன்.

மேலும் நிர்மாணத்துறையை மேம்படுத்துவதற்காக மேற்கொண்ட ஆரம்பக் கற்கைகளின் மூலம் உறுதி செய்யப்பட்ட விடயங்களின் அடிப்படையில் நிர்மாணத்துறையின் சட்டரீதியான சூழலை வலுவூட்டுவதற்கான 07 ஒழுங்குவிதிகள் நிறைவேற்றப்பட்டு வர்த்தமானியில் வெளியிடுவதற்கு 2018 ஆம் ஆண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அத்துடன் நிதி நெருக்கடியை எதிர்கொண்டு செயற்பாட்டு நடவடிக்கைகள் செயலிழந்து காணப்பட்ட அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனம் மற்றும் அரசாங்க அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் போன்ற பாரிய பல அரச நிறுவனங்களை இந்த நிதி நெருக்கடியிலிருந்து விடுவித்துக் கொள்ள இயலுமான ஆண்டு என்ற வகையிலும் 2018 முக்கியமானதாகும்.

ஒரு நாடு என்ற வகையில் திருப்தியுறக்கூடிய மற்றும் பெருமைப்படக்கூடிய வெற்றிகளை உருவாக்கித்தந்த ஒரு வருடத்தின் இறுதியதில் அதற்காக எனக்கு பலம்சேர்த்த மேன்மைதங்கிய

சனாதிபதி அவர்களுக்கும், கௌரவ பிரதம அமைச்சர் அவர்கள் உள்ளிட்ட அமைச்சரவைக்கும், வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை கௌரவ பிரதி அமைச்சராக செயற்பட்ட இந்திக பண்டாரநாயக்க அவர்களுக்கும், வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட ஒட்டுமொத்த பதவியணியினருக்கும், சகல இணை நிறுவனங்களின் தலைவர்கள், பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், நிறுவனத் தலைவர்கள் உள்ளிட்ட பதவியணியினருக்கும், எனது அந்தரங்க பதவியணி உறுப்பினர்களுக்கும், சகல வகையிலும் உதவி வழங்கிய வெளிநாட்டுத் தூதுவர்கள் உள்ளிட்ட சகல தரப்பினர்களுக்கும் எனது இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சஜித் பிரேமதாச (பா.உ.)**
வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

# செயலாளரின் செய்தி



நாடளாவிய ஓய்வற்ற அபிவிருத்திச் செயன்முறையை அமுல்படுத்துகின்ற ஒரு அமைச்சுக்கு நிருவாகத் தலைமைத்துவத்தைப் பெற்றுக் கொடுக்க எனக்கு வாய்ப்புக் கிடைத்தமை மற்றும் குறித்த அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கைக்கு செய்தியொன்றை வெளியிடக் கிடைத்தை நான் பெரும் பேறாகக் கருதுகின்றேன்.

2018 தேசிய வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு திறைசேரியினால் ஒதுக்கப்பட்ட ரூ.மி. 9535 ஆன நிதியை ஒவ்வொரு ரூபாவுக்கும் உச்சளவான பெறுமதியை சேர்த்து வீட்டுப் பயனாளிகளின் நலனுக்காக ஈடுபடுத்தும் பாரிய முயற்சியில் நாம் ஈடுபட்டுள்ளோம். உள்நாட்டு நிதி வரையறுக்கப்பட்டதாக உள்ளதன் காரணமாக, எமது தேசிய வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கு வெளிநாட்டு உதவியைப் பெற்றுக் கொள்ள மேற்கொண்ட முயற்சிகளின் பயனாக இந்திய அரசினால் 2018 ஆம் ஆண்டிலும் ரூ.மி. 600 ஆன அன்பளிப்பை பெற்றுத் தர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதற்கமைய 2018 ஆம் ஆண்டில் வீட்டு அலகுகளை புதிதாக நிர்மாணிப்பதற்கு நாம் ஏற்படுத்திக் கொண்ட இலக்கை மென்மேலும் 1200 வீட்டு அலகுகளினால் உயர்த்திக் கொள்ளவும் எமக்கு வாய்ப்புக் கிடைத்தது.

தேசிய வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்குத் தேவையான ஆரம்ப ஏற்பாடுகளைப் பெற்றுக் கொள்வதற்கும், அதிக பின்தங்கிய பொருத்தமான காணிகளை இனங்காண்பதன் சவாலுக்கு முகம் கொடுத்துவருகின்ற நிலையிலும் 2018 ஆம் ஆண்டில் புதிய மாதிரிக் கிராமங்கள் 915 இனை புதிதாக ஆரம்பிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதற்கமைய இன்று வரை ஆரம்பிக்கப்பட்டுள்ள மாதிரிக் கிராமங்களின் எண்ணிக்கை 1415 ஆக குறிப்பிட முடிந்துள்ளமை நாம் பெற்றுக் கொண்ட வெற்றியாகும். தேசிய நிர்மாணிப்பு நிகழ்ச்சித்திட்டமும் 2018 ஆம் ஆண்டில் மிக முக்கியமான திருப்புமுனையை அடைந்தது. நிர்மாணக் கைத்தொழிலில் பயிற்றப்பட்ட ஊழியர்களின் பற்றாக்குறைக்கான தீர்வாக புதிய கலைஞர்களை ஆட்சேர்ப்புச் செய்து, பயிற்றுவித்து ஏஒஜ தகைமைகளைக் கொண்ட கலைஞர்களை இத்துறைக்குப் பெற்றுக் கொடுப்பதற்காக திட்டமிடப்பட்ட “சில்ப சவிய” நிகழ்ச்சித்திட்டம் நிலையானதொரு மட்டத்தை அடைந்துள்ளது. அதன் மூலம் 2018 ஆம் ஆண்டில் இதுவரை ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள புதிய கலைஞர்களின் எண்ணிக்கை 5000 ஆகும். மேலும் நிர்மாணக் கைத்தொழிலின் தரத்தை மேம்படுத்துவதற்கு 07 ஒழுங்குவிதிகளை வர்த்தமானியில் வெளியிடுவதற்கு வாய்ப்புக் கிடைத்துள்ளமை நாம் பெற்ற விசேட வெற்றியாகும்.

வீடமைப்பு அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கைத்தொழிலின் முன்னேற்றத்திற்கான கொள்கைசார் தீர்மானங்களை மேற்கொண்டு அதற்குத் தேவையான வளங்களை ஈடுபடுத்தல் மற்றும் வழிகாட்டலை சரியாக நிறைவேற்றிய நாம் பெரும் அர்ப்பணிப்புக்களுக்கு மத்தியில் செயற்பட்டோம். இந்த அமைச்சின் விடயப்பரப்பு உரித்தான கொள்கைசார் தீர்மானங்களை தத்துவமுள்ளதாக்கல் மற்றும் வழிகாட்டலுக்கு மேன்மைதங்கிய சனாதிபதி, கௌரவ பிரதம அமைச்சர் உள்ளிட்ட அமைச்சரவை வழங்கிய உச்சளவான பங்களிப்புக்கு நன்றி தெரிவிப்பதுடன், இவ்வனைத்து வெற்றிகளையும் அடைந்துகொள்வதற்கான தலைமைத்துவம் மற்றும் சரியான அறிவுரைகளை வழங்கிவருகின்ற கௌரவ அமைச்சர் சஜித் பிரேமதாச அவர்களுக்கும், தொடர்ச்சியாக ஒத்துழைப்பை வழங்கி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை ஊக்குவித்த முன்னாள் கௌரவ பிரதி அமைச்சர் இந்திக்க பண்டாரநாயக்க அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ள இதனை வாய்ப்பாகக் கொள்கின்றேன்.

மேலும் சகல பணிகளையும் வெற்றிகரமாக்கிக் கொள்வதற்கு ஒத்துழைப்புடன் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்ற அமைச்சின் மேலதிகச் செயலாளர்கள் உள்ளிட்ட சகல அலுவலர்களுக்கும், கௌரவ அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சரின் அந்தரங்க பதவியணியினருக்கும், அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள சகல நிறுவனங்களினதும் தலைவர்கள் உள்ளிட்ட பதவியணியினருக்கும், சகல வகையிலும் ஒத்துழைப்பு வழங்கிய சகல அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் தலைவர்களுக்கும் எனது இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பர்னாட் வசந்த**
செயலாளர்,
வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு.

## ஐ ஆம் பகுதி – வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறைப் பிரிவு

**உள்ளடக்கம்**


1. அறிமுகம்
2. அமைச்சின் நோக்கு மற்றும் செயற்பணி (வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை பிரிவு)
3. அமைச்சின் கீழுள்ள பிரதான விடயப்பரப்புக்கள் (வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை பிரிவு)
4. அமைச்சின் நிறுவன ஒழுங்கமைப்பும், மனிதவளத் தோற்றப்பாடும் (வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை பிரிவு)
5. அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி (வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை பிரிவு)
6. அமைச்சின் ஒழுங்கமைப்பு (வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை பிரிவு)

6.1. நிருவாகப் பிரிவு
6.2 திட்டமிடல் பிரிவு
6.3 வீடமைப்புப் பிரிவு
6.4 தொழில்நுட்பப் பிரிவு
6.5 தேசிய வீடமைப்பு ஆணையாளர் பிரிவு
6.6 நிதிப் பிரிவு
6.7 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

7. அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்கள் (வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை பிரிவு)

7.1 தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை
7.2 நகர குடியிருப்பு அதிகாரசபை
7.3 கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை
7.4 ஓ'ன் வீவ் அபிவிருத்தி தனியார் கம்பனி
7.5 தேசிய வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி
7.6 நடுத்தர வருமான மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி துரித நிகழ்ச்சித்திட்டம்
7.7 கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம்
7.8 அரசாங்க தொழிற்சாலை திணைக்களம்
7.9 நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை
7.10 இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம்
7.11 தேசிய இயந்திர சாதன நிறுவனம்
7.12 அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனம்
7.13 வரையறுக்கப்பட்ட கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம்

8. நிதி ஏற்பாடுகள் (வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை பிரிவு)
9. 2017 ஆம் ஆண்டுக்குரிய அமைச்சின் முன்னேற்றம் (வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை பிரிவு)

9.1. நிருவாகப் பிரிவு
9.1. நிருவாகப் பிரிவு
9.2 திட்டமிடல் பிரிவு
9.3 வீடமைப்புப் பிரிவு
9.4 நிர்மாணத் தொழில்நுட்பப் பிரிவு
9.5 தேசிய வீடமைப்பு ஆணையாளர் பிரிவு
9.6 நிதிப் பிரிவு
9.7 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

10. 2017 ஆம் ஆண்டு அமைச்சு எதிர்நோக்கிய சவால்கள் (வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை பிரிவு)

# II ஆம் பகுதி – கலாசார பிரிவு

## உள்ளடக்கம்

11. கலாசார அலுவல்கள் பிரிவு
12. நிருவாக அலுவல்கள் (கலாசார அலுவல்கள் பிரிவு)
13. நிதி அலுவல்கள் (கலாசார அலுவல்கள் பிரிவு)
14. நிறுவன ஒழுங்கமைப்பு மற்றும் மனிதவள தோற்றப்பாடு (கலாசார அலுவல்கள் பிரிவு)
15. கலாசார மேம்பாடு
16. கலாசார உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி
17. கலாசார பயிற்சி நிலையம் - வேயாங்கொடை
18. வழங்கல் மற்றும் பெறுகை நடவடிக்கைகள் (கலாசார அலுவல்கள் பிரிவு)
19. உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் (கலாசார அலுவல்கள் பிரிவு)
20. வெளிநாட்டுக் கலாசார உறவுகள் (கலாசார அலுவல்கள் பிரிவு)
21. தேசிய மரபுரிமைகள் (கலாசார அலுவல்கள் பிரிவு)

# 1. அறிமுகம்

2018 ஆம் ஆண்டின் செயலாற்றுகை அறிக்கைகை சமர்ப்பிக்கின்ற சந்தர்ப்பத்தில் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சுக்கு கலாசார அலுவல்கள் விடயமும் இணைக்கப்பட்டுள்ளதனால் அமைச்சின் விடயப்பரப்பு விஸ்தரிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, செயலாற்றுகை அறிக்கையின் முதல் பகுதியின் மூலம் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை விடயப்பரப்பு பற்றிய தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், இரண்டாம் பகுதியின் மூலம் கலாசார விடயப்பரப்பு பற்றிய தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இணை நிறுவனங்கள் பற்றிய தகவல்களை உள்ளடக்கும் போது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2013/33 ஆம் இலக்க 2018 டிசம்பர் 28 ஆம் திகதிய வர்த்தமானி பத்திரிக்கை மூலம் பொறுப்பளிக்கப்பட்டுள்ள நிறுவனங்கள் மாத்திரம் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளன.

2018 ஆம் ஆண்டு வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட ஒட்டுமொத்த ஏற்பாடுகள் ரூ.மி. 11389 ஆகும். இதில் ரூ.மி. 10946 மூலதன பயன்பாட்டுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. ஆண்டினுள் நிலவிய அரசியல் சீரற்ற நிலைக்கு மத்தியில் அமைச்சின் நிதிசார் முன்னேற்றத்தை 85% ஆன மட்டத்தில் பேணிவர முடிந்துள்ளமை அமைச்சு என்ற வகையில் நாம் பெற்ற வெற்றியாகும்.

மேலும் கலாசார பிரிவுக்கு ஒதுக்கப்பட்ட ஒட்டுமொத்த ஏற்பாடுகள் ரூ.மி. 2153 ஆகும். இதில் ரூ.மி. 1239 மூலதன பயன்பாட்டுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. 2018.12.31 ஆம் திகதிக்கான கலாசார பிரிவின் நிதிசார் முன்னேற்றம் 60% ஆக பதிவு செய்யப்பட்டிருந்தது.

தேசிய வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தும் போது 905 மாதிரிக் கிராமங்கள் ஆண்டினுள் ஆரம்பிக்கப்பட்டு ஆண்டின் இறுதியில் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ச்சியாக வேலைகள் இடம்பெறுகின்ற கிராமங்களின் எண்ணிக்கையை 1415 மாற்றிக் கொள்ள முடிந்தது.

வறிய குடும்பங்களுக்கு உதவி அடிப்படையிலும் குறைந்த வருமானம் பெறுவோருக்கு சலுகை கடன் அடிப்படையிலும் நிதி உதவி மற்றும் தொழில்நுட்ப உதவிகளையும் செய்துகொடுத்து அமுல்படுத்தப்பட்ட வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் பல்வேறு இனத்தவரின் தேவைகளுக்கு அமைய தொடர்ந்தும் நல்லமுறையில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. ஒரு வீட்டை நிர்மாணிக்க காணித் துண்டொன்று இல்லாத சமுதாயத்தினருக்கு மாதிரிக் கிராமமொன்றில் ஒரு காணித் துண்டுடன் ஒரு வீட்டின் உரிமையை உறுதி செய்து கொடுப்பதுடன் காணித் துண்டின் உரித்தைக் கொண்டுள்ளவர்களுக்கு விசிறி கடன் மற்றும் உதவி நிகழ்ச்சித்திட்டங்கள் பல 2018 ஆம் ஆண்டிலும் அமுல்படுத்தப்பட்டன. இந்த நிகழ்ச்சித்திட்டத்தை மதிப்பீடு செய்த இந்திய அரசு மேலும் ரூ.மி. 600 ஐ தேசிய வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக மாதிரிக் கிராமம் வேலைத்திட்டத்திற்குப் பெற்றுத் தந்தமை ஆண்டினுள் நாம் பெற்ற மற்றொரு வெற்றியாகும்.

நிர்மாணத்துறையில் பயிற்றப்பட்ட ஊழியப் பற்றாக்குறைக்கான தீர்வை செய்துகொடுத்து “சில்ப சவிய” தேசிய நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றிகரமாக அமுல்படுத்திய ஆண்டு என்ற வகையிலும் 2018 ஆம் ஆண்டு முக்கியத்துவம் பெறுகின்றது. மேலும் நிர்மாணத்துறையை மேம்படுத்துவதற்கான புதிய சட்டங்களை ஆக்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு ஆண்டு என்ற வகையிலும் 2018 முக்கியத்துவம் பெறுகின்றது. நிர்மாணக் கைத்தொழிலின் முன்னேற்றத்திற்காக பல்வேறு துறைகளிலும் நடவடிக்கைகளை மேற்கொண்டு பெறுபேறுகளை அடைந்துகொள்ள இயலுமான ஆண்டாகவும் இது அமைந்துள்ளது.

கலாசாரப் பிரிவை நோக்கும் போது பல்வேறு கலைத்துறைகளை மையமாகக் கொண்டு

அரச விருது விழாக்களை ஒழுங்கு செய்து இத்துறையில் போட்டித்தன்மைமிக்க புத்தெழுச்சியை ஏற்படுத்த செயற்பட்ட ஆண்டாக இதனைக் குறிப்பிட முடியும்.

நாடளாவிய ரீதியில் காணப்படுகின்ற 28 காலாசார நிலையங்களின் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளல் மற்றும் 87 கலாசார நிலையங்களின் சிறிய புதுப்பித்தல்களை மேற்கொள்வதற்கு மேலதிகமாக புதிதாக 02 கலாசார நிலையங்களை திறந்து வைத்தமையும், புதிய 28 கலாசார நிலையங்களை நிர்மாணிக்கும் பணிகளை ஆரம்பிக்க முடிந்தமையும் முக்கியமான அம்சங்களாகும். இதுவரை நாடளாவிய ரீதியில் இயங்கிவருகின்ற கலாசார நிலையங்களின் எண்ணிக்கை 192 ஆகும் என்பதுடன், அவற்றினூடாக 44,000 இற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு இலவசமாக உள்நாட்டு அழகியற்கலை பாடநெறிப் பயிற்சி அளிக்கப்படுகின்றது.
இதற்கு மேலதிகமாக கலைத் துறையில் ஈடுபட்டுள்ள நிரந்தர வருமாம் இல்லாத அல்லது ஓய்வூதியம் பெறாத 60 வயதைத் தாண்டிய கலைஞர்கள் 2914 பேருக்கு ரூ.மி. 29 இற்கும் மேல் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

# 2. அமைச்சின் நோக்கு மற்றும் செயற்பணி (வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை பிரிவு)

## நோக்கு

நிலைபேறான குடியிருப்பு அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கைத்தொழிலில் புத்தெழுச்சி

## செயற்பணி

இலங்கைத் தொழில்முயற்சியாளர்கள், தொழில் வல்லுனர்கள், ஊழியப் படையணியினரை ஆற்றல்கள் மற்றும் வளங்களின் மூலம் பலமூட்டி, திட்டமிட்டு சுற்றாடலுக்குச் சாதகமான மற்றும் தரமான நிர்மாணிப்புக் கைத்தொழிலை ஏற்படுத்தல் மற்றும் சமுதாயத்தின் பங்கேட்புடனான அடிப்படை வசதிகளைக் கொண்டுள்ள குடியிருப்புகளை உருவாக்கல், குறைந்த வருமானம் பெறும் மக்களை பொருளாதார, சமூக மற்றும் கலாசார ரீதியாக வலுவூட்டுவதன் மூலம் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்தல்”

## வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் விடயப்பரப்பு மற்றும் பிரதான விடயப்பாரப்பக்கள்

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறையின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கான கொள்கைகள், அபிவிருத்தித் திட்டங்களைத் தயார் செய்தல் மற்றும் இத்துறையில் ஈடுபட்டுள்ள உரிய நிறுவனங்களுக்கான வழிகாட்டல்களைப் பெற்றுக்கொடுத்தல்.

# 3.1 அமைச்சின் கீழுள்ள பிரதான விடயப்பரப்புக்கள் (வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை பிரிவு)

## வீடமைப்பு பிரிவு

1. குறைந்த வருமானம் பெறுவோர் மற்றும் விசேட சமுதாயக் குழுக்கள் உள்ளடங்களாக பொது மக்களின் வீடமைப்புத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான வீடமைப்பு நிதி உதவி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
2. வீடமைப்பு அபிவிருத்தித் தேவைகளுக்கு காணிகளை கொள்ளல், சாட்டுதல் செய்தல் மற்றும் நீக்கம் செய்வது தொடர்பிலான நடவடிக்கைகள்.
3. வீடமைப்பு விடயம் தொடர்பான கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களைத் தயார் செய்தல், பின்னாய்வு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.

## நிர்மாணப் பிரிவு

1. நிர்மாண விடயம் தொடர்பான கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களைத் தயார் செய்தல், பின்னாய்வு, மதிப்பீடு செய்தல்.
2. நிர்மாணக் கைத்தொழிலுக்கு ஆலோசனை மற்றும் ஒழுங்குபடுத்தும் சேவைகளை வழங்குதல் மற்றும் கனரக நிர்மாண உபகரணங்களை இயக்குவது மற்றும் பராமரிப்புச் செய்வது பற்றிய பயிற்சி.
3. நிர்மாணிப்புக் கைத்தொழில் தொடர்பிலான சட்டங்கள், விதிகள் மற்றும் நியமங்களுக்கு அமைய நிர்மாணக் கைத்தொழில் துறையின் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தல், பதிவு செய்தல், முறைப்படுத்தல் மற்றும் தரப்படுத்தல்.

## 4. அமைச்சின் நிறுவன ஒழுங்கமைப்பும், மனிதவளத் தோற்றப்பாடும் (வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை பிரிவு)




கண. – கணக்காளர்
பி.ப. – பிரதிப் பணிப்பாளர்
உ.செ. – உதவிச் செயலாளர்
உ.பி. – உதவிப் பணிப்பாளர்
ச.அ. – சட்ட அலுவலர்
நி.அ. – நிருவாக அலுவலர்
மொ. – மொழிபெயர்ப்பாளர்
த.தொ.அ. – தகவல் தொழில்நுட்ப அலுவலர்
அபி.அ. – அபிவிருத்தி அலுவலர்
தொ.அ. – தொழில்நுட்ப அலுவலர்
க.அ. – கனிய அளவையாளர்
மு.உ. – முகாமைத்துவ உதவியாளர்
சா. – சாரதி
அலு.சிற். – அலுவலக சிற்றூழியர்

## 5. அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி (வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை பிரிவு)

| தொ.இல. | பதவி | சம்பள அளவுத் திட்டம் | ஏற்புடைய சேவை | அங்கீகரிக்கப் பட்ட பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | செயலாளர் | ளுடு 4 | | 01 |
| 2 | மேலதிகச் செயலாளர் (நிருவாகம்) | ளுடு 3 | இ.நி.சே. விசேட | 01 |
| 3 | மேலதிகச் செயலாளர் (வீடமைப்பு மற்றும் அபிவிருத்தி) | ளுடு 3 | இ.நி.சே. விசேட | 01 |
| 4 | மேலதிகச் செயலாளர் (தொழில்நுட்பம்) | ளுடு 3 | இ.பொ.சே. விசேட | 01 |
| 5 | பிரதம நிதி அலுவலர் | ளுடு 3 | இ.க.சே. விசேட | 01 |
| 6 | சிரேஷ்ட உதவிச் செயலாளர் (நிருவாகம்) | ளுடு 1 | இ.பொ.சே. 1 | 01 |
| 7 | பணிப்பாளர் (வீடமைப்பு) | ளுடு 1 | இ.பொ.சே. 1 | 01 |
| 8 | பணிப்பாளர் (நிர்மாணத் தொழில்நுட்பம்) | ளுடு 1 | இ.பொ.சே. 1 | 01 |
| 9 | பணிப்பாளர் (திட்டமிடல்) | ளுடு 1 | இ.தி.சே. 1 | 01 |
| 10 | பணிப்பாளர் (கட்டிடம்) | ளுடு 1 | இ.பொ.சே. 1 | 01 |
| 11 | பணிப்பாளர் (பொறியியல் சேவைகள்) | ளுடு 1 | இ.பொ.சே. 1 | 01 |
| 12 | பணிப்பாளர் (நகரக் குடியிருப்பு அபிவிருத்தி) | ளுடு 1 | இ.பொ.சே. 1 | 01 |
| 13 | பிரதம கணக்காளர் | ளுடு 1 | இ.க.சே. ஐ | 01 |
| 14 | பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் | ளுடு 1 | இ.க.சே. ஐ | 01 |
| 15 | வீடமைப்பு ஆணையாளர் | ளுடு 1 | - | 01 |
| 16 | பிரதிப் பணிப்பாளர்.'. உதவிப் பணிப்பாளர் (வீடமைப்பு) | ளுடு 1 | இ.நி.சே. ஐஐ / ஐஐஐ | 02 |
| 17 | பிரதிப் பணிப்பாளர்.'. உதவிப் பணிப்பாளர் (நிர்மாணத் தொழில்நுட்பம்) | ளுடு 1 | இ.பொ.சே ஐஐ / ஐஐஐ | 01 |
| 18 | பிரதிப் பணிப்பாளர்.'. உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) | ளுடு 1 | இ.தி.சே. ஐஐ / ஐஐஐ | 01 |
| 19 | பிரதிப் பணிப்பாளர்.'. உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) | ளுடு 1 | இ.பொ.சே ஐஐ / ஐஐஐ | 01 |
| 20 | பிரதிப் பணிப்பாளர்.'. உதவிப் பணிப்பாளர் (பொறியியல் சேவைகள்) | ளுடு 1 | இ.பொ.சே. ஐஐ / ஐஐஐ | 01 |
| 21 | பிரதிப் பணிப்பாளர்.'. உதவிப் பணிப்பாளர் (நகரக் குடியிருப்பு அபிவிருத்தி) | ளுடு 1 | இ.பொ.சே ஐஐ / ஐஐஐ<br>இ.பொ.சே ஐஐ / ஐஐஐ | 01<br>01 |
| 22 | உதவிச் செயலாளர் (நிருவாகம்) | ளுடு 1 | இ.நி.சே ஐஐஐ | 02 |
| 23 | உதவிச் செயலாளர் (தாபன நடவடிக்கை) | ளுடு 1 | இ.நி.சே ஐஐஐ | 01 |
| 24 | கணக்காளர் | ளுடு 1 | இ.க.சே ஐஐ / ஐஐஐ | 02 |

| | | | | |
|---|---|---|---|---|
| 25 | சட்ட அலுவலர் | ளுடு 1 | திணைக்களம்சார் | 01 |
| **26** | தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பவியல் அலுவலர் | ளுடு 1 | இ.த.தொ.சே.2.ஐஐ | 01 |
| **27** | நிருவாக அலுவலர் | ஆுே 7 | அ.மு.உ.சே. (சிறப்புத்தரம்) | 01 |
| **28** | செயலாளரின் ஒருங்கிணைப்புச் செயலாளர் (தற்காலிக பதவியாகும்) | ஆுே 6 | | 01 |
| **29** | மொழிபெயர்ப்பாளர் | ஆுே 6 | மொழிபெயர்ப்பாளர் சேவை | 02 |
| **30** | வரவுசெலவுத் திட்ட உதவியாளர் | ஆுே 4 | இணைந்த அலுவலர் | 01 |
| **31** | வழங்கல் உதவியாளர் | ஆுே 4 | இணைந்த அலுவலர் | 01 |
| **32** | அபிவிருத்தி உதவியாளர் | ஆுே 4 | இணைந்த அலுவலர் | 25 |
| **33** | வீடமைப்பு அபிவிருத்தி உதவியாளர் | ஆுே 4 | இணைந்த அலுவலர் | 11 |
| **34** | அபிவிருத்தி உதவியாளர் | ஆுே 4 | இணைந்த அலுவலர் | 19 |
| **35** | முகாமைத்துவ உதவியாளர் | ஆுே 4 | அ.மு.உ.சே. | 43 |
| **36** | தொழில்நுட்ப அலுவலர் | ஆவு 2 | இ.தொ.சே. | 05 |
| **37** | கனிய அளவையாளர் | ஆவு 2 | இ.தொ.சே | 01 |
| **38** | சாரதி | ீடு 3 | சாரதி சேவை | 26 |
| **39** | அலுவலக சிற்றூழியர் | ீடு 1 | அலுவலக சிற்றூழியர் சேவை | 26 |
| **40** | வீடியே கமரா இயக்குநர் (தற்காலிக) | | | 01 |
| **41** | புகைப்படக் கலைஞர் (தற்காலிக) | | | 01 |
| **42** | அலுவலக கலைஞர் உதவியாளர் (தற்காலிக) | | | 01 |
| | **மொத்தப் பதவிகளின் எண்ணிக்கை** | | | **195** |

## அமைச்சின் ஒழுங்கமைப்பு (வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை பிரிவு)



# 6. அமைச்சின் ஒழுங்கமைப்பு (வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை

## 6.1 நிருவாகப் பிரிவு

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சினால் அரசாங்கக் கொள்கைகளை அமுல்படுத்தும் போதும் பொது நலன்புரிக்காக மேற்கொள்ளப்படுகின்ற பல்வேறு பணிகளின் போதும் அமைச்சின் சகல பிரிவுகளுக்கும் ஒத்துழைப்பினை வழங்கி அதற்குத் தேவையான வேலைச் சூழலை ஒழுங்குசெய்து கொடுத்தல் மனித வளம் மற்றும் பௌதீக வளங்களை வினைத்திறனுடனும், உற்பத்தித் திறனுடனும் முகாமைத்துவம் செய்வது நிர்வாகப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது.

**நிருவாக பிரிவின் பிரதான பணிகள்**

1. அமைச்சில் சேவையாற்றுகின்ற சகல அலுவலர்களினதும் தாபான நடவடிக்கைகளை பேணி வருதல்.
2. அமைச்சின் வழங்கல் நடவடிக்கைகளை நிறைவேற்றல்.
3. அமைச்சின் சகல பராமரிப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்.
4. அமைச்சு மற்றும் இணைந்த நிறுவனங்களில் அமைச்சின் தலையீட்டின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற சகல நிருவாக நடவடிக்கைகளும்.
5. அமைச்சின் பதவியணி சம்பந்தமான நடவடிக்கைகள்.
6. அமைச்சின் சகல பிரிவுகளுக்கும் தேவையான வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல்.
7. அமைச்சின் இணையத்தளத்தை இற்றைப்படுத்தல்.
8. உற்பத்தித் திறன் செயற்பாடுகளை மேற்கொள்ளல்.
9. அமைச்சின் நடவடிக்கைகளுக்கான போக்குவரத்து வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல்.
10. அமைச்சின் அலுவலர்களுக்கான பயிற்சித் தொடர்களை நடாத்தல்.
11. அமைச்சின் இணை நிறுவனங்களின் செயலாற்றுகை அறிக்கைகள் தொடர்பிலான நடவடிக்கைகள்

## 6.2 திட்டமிடல் பிரிவு

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களில் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை திட்டமிடல் மற்றும் திட்டமிடப்பட்டவாறு முன்னேற்றத்தை அடைந்துகொள்வதற்கு வழிநடாத்துவது இப்பிரிவின் பிரதான செயற்பணியாகும்.

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறையில் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி நடவடிக்கைகள் பற்றிய சரியான தகவல்களைப் பெற்றுக்கொடுப்பதன் மூலம் உரிய தரப்பினர்கள் மற்றும் பொதுமக்களை அறிவுறுத்துவதும் இதில் உள்ளடங்கும்.

மேலும், வீடமைப்பு மற்றும் நிர்மாணத் துறையின் அபிவிருத்தித் தேவைகளை இனங்கண்டு நிறுவனங்களினால் தயார் செய்யப்படுகின்ற கருத்திட்டப் பிரேரணைகளை நிதி அமைச்சினூடாக அங்கீகரித்துக்கொள்ள உதவுவதும், அமுல்படுத்தப்பட்டுள்ள கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை பின்னாய்வு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்வதும் திட்டமிடல் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

**திட்டமிடல் பிரிவின் பிரதான பணிகள்**

1. அமைச்சின் நோக்கு மற்றும் நோக்கங்களுக்கு ஏற்புடையதாக அமைச்சு மற்றும் அதன் கீழ் இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்களின் செயல் ரீதியான திட்டத்தைத் தயார் செய்வது

தொடர்பில் உரிய ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள்.

2. அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றத்தை மாதாந்த மற்றும் வருடாந்த செயற்றிட்டத்திற்கமைய மதிப்பீடு செய்தல்.
3. அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் சம்பந்தமான தகவல்களைத் தயார் செய்வதும், அறிக்கையிடுவதும்.
4. அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களின் கருத்திட்டப் பிரேரணைகளை, தேசிய திட்டமிடல் திணைக்களத்திடம் சமர்ப்பிப்பதும் ஒருங்கிணைப்புச் செய்வதும்.
5. கருத்திட்டங்களை பின்னாய்வு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
6. அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்கள் சம்பந்தமான அமைச்சரவை தீர்மானங்களை அமுல்படுத்துவது பற்றிய பின்னாய்வை மேற்கொள்ளல்.
7. அமைச்சின் வருடாந்த முன்னேற்ற அறிக்கை, செயலாற்றுகை அறிக்கையைத் தயார் செய்தல்.
8. முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை ஒழுங்குசெய்தல் மற்றும் பின்னாய்வு செய்தல்.

## 6.3 வீடமைப்புப் பிரிவு

வீடமைப்புத் துறையின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக வீடமைப்பு அபிவிருத்தி துறையின் கீழ் தேசிய திட்டங்களை திட்டமிடல், திட்டங்களைத் தயார் செய்தல், வழிநடாத்தல், பின்னாய்வு, மற்றும் அத்துறையில் ஈடுபட்டுள்ள அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு வழிகாட்டல் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

**வீடமைப்புப் பிரிவின் பிரதான பணிகள்**

**1. கொள்கைகளை வகுத்தல்**

- வீடமைப்புத் துறையின் முன்னேற்றத்துக்குத் தேவையான கொள்கைகளைத் தயார் செய்தல்.
- வீடமைப்புத் துறை சம்பந்தமான அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் மற்றும் குறிப்புக்களைத் தயார் செய்தல்
- வீடமைப்புத் துறை சம்பந்தமான சட்டங்களைத் திருத்தியமைத்தல்.
- வீடமைப்புத் துறைக்கு ஏற்புடையதான கொள்கைகளை ஏனைய அரசதுறை நிறுவனங்களுடன் இணைந்து அமுல்படுத்தல்.

**2. காணிகள் பற்றிய கடமைகள்**

- வீடமைப்பு அபிவிருத்தி நோக்கங்களுக்கு காணிகளைச் சுவீகரித்தல்.·. பொறுப்பேற்றுக் கொள்வது சம்பந்தமான நடவடிக்கைகள்.
- வீடமைப்பு அபிவிருத்தித் தேவைகளுக்கு காணிகளை நீக்கம் செய்வது சம்பந்தமான நடவடிக்கைகள்
- தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் 8(1) பிரிவின் கீழ் காணிகள்.·. வீடுகளுக்கான சட்ட ரீதியான உரித்தினை பொதுமக்களிடம் கையளித்தல்.

**3. வீடமைப்பு அபிவிருத்தி**

- நாட்டின் வீடமைப்புத் தேவைக்குப் பொருத்தமானவாறு வீடமைப்பு நிர்மாணிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் வீடமைப்புக் கருத்திட்டங்களை அமுல்படுத்தல்.
- தொடர்மாடி வீடமைப்புத் திட்டங்களை மறுசீரமைத்தல்.
- வீடமைப்புக் கடன் உதவி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
- பங்கேட்பு முறையியலின் கீழ் வீடமைப்பு

**4. வேறு கடமைகள்**

- மாவட்ட, பிரதேச மற்றும் கிராமிய வீடமைப்புக் குழுக்களைத் தாபித்தல்.
- உலகக் குடியிருப்புத் தினத்தை முன்னிட்டு நாடு முழுவதிலும்

வீடமைப்பு, நிர்மாணிப்பு சம்பந்தமான நிகழ்ச்சித்திட்டங்களை

- அமுல்படுத்துவதும், உலகக் குடியிருப்புத் தினத்தைக் கொண்டாடுவதும்.
- வேறு அரச நிறுவனங்களுடன் இணைந்து வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுடன் வீடமைப்புக் கருத்திட்டங்களை ஒருங்கிணைப்புச் செய்தல்.
- குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புக்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் சமுதாய அபிவிருத்தி.

## 6.4 தொழில்நுட்பப் பிரிவு

### 6.4.1 பொறியியல் சேவைகள் பிரிவு

நிர்மாணிப்புக் கருத்திட்டங்களுக்கு நியாயமான மற்றும் தாங்கிக்கொள்ளக் கூடிய விலைகளை நிர்ணயிப்பதன் மூலம் ஒட்டுமொத்த நிர்மாணிப்புக் கைத்தொழிலின் மொத்த நிர்மாணிப்புச் செலவினத்தைக் கட்டுப்படுத்துவது மற்றும் அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களின் நிர்மாணக் கருத்திட்டங்களுக்கு வெளிப்படைத் தன்மை மிக்க நியாயமான விலைகளுக்கமைய ஒப்பந்ததாரர்களைத் தேர்ந்தெடுக்க உதவுவதும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

**பொறியியல் சேவைகள் பிரிவின் பிரதான பணிகள்**

1. அரசாங்க நிறுவனங்களின் நிர்மாணிப்பு சம்பந்தமான நிலையான தொழில்நுட்பக் குழுவின் அங்கீகாரங்களைப் பெற்றுக் கொடுத்தல்.
2. அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களில் பெறுகை குழுக்களை நியமனம் செய்தல்.
3. ஒப்பந்த வித்தியாசங்களுக்கு அமைச்சின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொடுத்தல்.
4. அமைச்சின் பெறுகை குழுவின் தீர்மானங்களைப் பெற்றுக்கொடுத்தல்.
5. ஒப்பந்ததாரர்கள் சம்பந்தமான நிர்மாணிப்புத் துறைக்குரிய தரவுக் கட்டமைப்பு மற்றும் நிர்மாணிப்புத் துறை சம்பந்தமான விலைகள் பற்றிய தரவுக்கட்டமைப்பைப் பேணிவருதல்.

### 6.4.2 நிர்மாணத் தொழில்நுட்பப் பிரிவு

சுற்றாடலுக்குச் சாதகமான, தரமான நிர்மாணிப்புக் கைத்தொழிலை ஏற்படுத்துவதற்கு அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களை வழிநடாத்துவது இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

**நிர்மாணத் தொழில்நுட்பப் பிரிவின் பிரதான பணிகள்**

1. நிர்மாணிப்புத் துறையுடன் இணைந்துள்ள நிர்மாணிப்பு மற்றும் பொறியியல் சேவைகளை வழங்கும் நிறுவனங்களை நிர்மாணிப்புக் கைத்தொழிலின் முன்னேற்றத்திற்காக வழிநடாத்தல்.
2. நிர்மாணத் துறைக்குத் தேவையான ஊழியப்படையைத் தயார் செய்தல்.
3. தொழில் வல்லுனர்கள், நிர்மாணிப்புக் கலைஞர்களை திறமையும் அறிவும் மிக்கவர்களாக்குதல் மற்றும் தரமான நிர்மாணிப்புகளை மேற்கொள்வதற்காக அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களை வழிநடாத்தல்.
4. தேவையான சந்தர்ப்பங்களில் அமைச்சரவை விஞ்ஞாபனங்களைச் சமர்ப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளல்.

### 6.4.3 நகரக் குடியிருப்பு அபிவிருத்திப் பிரிவு

பிரதானமாக நகர்புறப் பிரதேசங்களில் வாழும் குறைந்த வருமானம் பெறுகின்ற மக்கள் மற்றும் ஏனைய மக்களுக்குத் தேவையானவாறு வசிப்பதற்கு ஆற்றல் உள்ள வசதிகளைக் கொண்ட வீடமைப்புக் கருத்திட்டங்களை நிர்மாணிப்பதை வழிநடாத்தல் மற்றும் நகரக்

குடியிருப்பு அபிவிருத்தியானது இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

**நகரக் குடியிருப்பு அபிவிருத்திப் பிரிவின் பிரதான பணிகள்**

1. நகரக் குடியிருப்பு கருத்திடட்ங்களை இனங்காணல் மற்றும் அமுல்படுத்துவதற்கு, உரிய நிறுவனங்களுக்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குதல் மற்றும் தொழில்நுட்ப வழிகாட்டல்கள்.

2. நகரக் குடியிருப்பு அபிவிருத்திக் கருத்திட்டங்களை கண்காணிப்புச் செய்தல் மற்றும் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல்.

## 6.5 தேசிய வீடமைப்பு ஆணையாளர் பிரிவு

இந்தப் பிரிவு 1973 இன் 01 ஆம் இலக்க வீடமைப்பு ஆதன உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் பணிகளை நிறைவேற்றுகின்றது. அவ்வாறே, 1972 இன் 7 ஆம் இலக்க வாடகைச் சட்டத்தின் கீழ் பொறுப்பளிக்கப்பட்டுள்ள சில பணிகளையும் நிறைவேற்றி வருகின்றது.

மேலே குறிப்பிடப்பட்ட சட்டங்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ள பிரதான நோக்கங்களான வாடகைக் குடியிருப்பாளர்களுக்கு உறுதிகளைப் பெற்றுக்கொடுத்தல், அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்ட வீடுகளின் உரிமையாளர்களுக்கு நட்டஈடு வழங்குதல் போன்ற நோக்கங்களுக்காக இந்தப்பிரிவு செயற்பட்டுவருகிறது.

**தேசிய வீடமைப்பு ஆணையாளர் பிரிவின் பிரதான பணிகள்**

1. வாடகைக் குடியிருப்பாளர்களுக்கு உறுதிகளைப் பெற்றுக்கொடுத்தல்.
2. அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்ட வீடுகளின் உரிமையாளர்களுக்கு நட்டஈடு வழங்குதல்.
3. பொது வசதிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பகுதிகள் தொடர்பில் எழுகின்ற சிக்கல்களைத் தீர்த்துவைத்தல்.

## 6.6 நிதிப் பிரிவு

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள ஏனைய நிறுவனங்களுக்கு ஏற்புடையதாகின்ற நோக்கங்களை அடைந்துகொள்ளத் தேவையான நிதி வளம் மற்றும் ஆலோசனையைப் பெற்றுக்கொடுத்தல், மேற்படி வளங்களைப் பயன்மிக்கவாறும், வினைத்திறனுடனும் பயன்படுத்துவதற்குத் தேவையான கட்டமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு முறைகள் பற்றி ஆலோசனை வழங்குதல் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

**நிதிப் பிரிவின் பிரதான பணிகள்**

1. வினைத்திறன் மற்றும் விளைதிறன்மிக்க நிதி முகாமைத்துவக் கட்டமைப்பை அமைச்சினுள் அமுல்படுத்தல்.
2. நிதி முகாமைத்துவம், நிதித் திட்டமிடல், வரவு செலவுத்திட்டமிடல், சொத்து முகாமைத்துவம் மற்றும் கொள்வனவு, முகாமைத்துவம் தொடர்பில் அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களுக்கு ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களைப் பெற்றுக் கொடுத்தல்.

3. நிதி அமைச்சுடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை பேணிவருதல் மற்றும் அமைச்சின் நோக்கங்களை அடைந்துகொள்ளக்கூடியவாறு நிதி வளங்களை திறைசேரியிடமிருந்து பெற்றுக் கொண்டு அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களுக்கு பகிர்ந்தளித்தல்.

4. அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களுக்கு அமைச்சின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக அந்நிறுவனங்களுடன் கூட்டாக நடவடிக்கைகளை மேற்கொள்ளல், வருடாந்த வரவு செலவுத்திட்ட அறிக்கைகளைத் தயார் செய்தல் மற்றும் ஆண்டு முழுவதிலும் வரவு செலவுத்திட்டக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

5. வருடாந்த ஒதுக்கீட்டுச் சட்டத்தின் மூலம் அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களுக்கு ஒதுக்கப்படுகின்ற நிதியைச் செலவிடும் போது உரியவாறு அறிக்கையிடல் மற்றும் மாதாந்த, வருடாந்த நிதி அறிக்கைகளை உரிய நிறுவனங்களிடம் சமர்ப்பித்தல்.

## 6.7 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் உத்தேச நோக்கங்களை யதார்த்தமாக மாற்றியமைத்துக் கொள்வதற்காக சிறந்த நிதி நிருவாகம் மற்றும் முறையான முகாமைத்துவத்தை தாபிக்கச் செயற்படல்.

அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களின் நிதி நிருவாகம் மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகளில் பங்கேற்று அந்த நடவடிக்கைகளை மென்மேலும் முறையாகவும் வினைத்திறனுடனும் மேற்கொள்வதற்காக முகாமைத்துவத்திற்கு வழிகாட்டுதல் மற்றும் தேவையான ஆலோசனைகளைப் பெற்றுக்கொடுத்து உதவுதல்.

**உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் பிரதான பணிகள்**

1. அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களின் கணக்காய்வு நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்தல்.

2. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களின் மூலம் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் சிக்கல்களை குறைத்துக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளல்.

3. கணக்காய்வு மற்றும் விசாரணை நடவடிக்கைகளின் மூலம் நிறுவனங்களிலுள்ள சிக்கல்களை குறைத்துக் கொள்ள உதவுதல்.

4. அரச பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு மற்றும் அரச கணக்குகள் பற்றிய குழுவின் சிபாரிசுகள் மற்றும் கட்டளைகளை அமுல்படுத்துவது தொடர்பில் பின்னாய்வை மேற்கொள்ளல்.

# 7. அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்கள் (வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை பிரிவு)

## 7.1 தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை

இலங்கையில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் அடிப்படை வசதிகளைக் கொண்ட பாதுகாப்பான வீடொன்றை உரித்தாக்கிக் கொடுக்கும் நோக்கத்துடன், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை செயற்பட்டு வருகின்றது. குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்களின் வீடமைப்புத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதை ஊக்குவித்தல், வசதிகளை செய்துகொடுத்தல் மற்றும் ஒருங்கிணைப்புச் செய்வதன் மூலம் பொருளாதார சுபீட்சத்தை அடையச் செய்வதற்காக 1979 இன் 17 ஆம் இலக்க "தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரச் சபை" சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்டுள்ளதுடன், இன்று வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் கீழ் 25 மாவட்டங்களிலும் அலுவலகங்களைக் கொண்டுள்ளதுடன், கொழும்பு நகரின் தலைமை அலுவலகத்திற்கு மேலதிகமாக 2 உப அலுவலகங்களையும் கொண்டுள்ளது

## 7.2 நகர குடியிருப்பு அதிகாரசபை

நிலைபேறான நகரக் குடியிருப்புக்களில் பெருமைமிகு வாழ்க்கையை உறுதிசெய்யும் நோக்கத்துடன், குறைந்த வசதிகளைக் கொண்ட நகர்ப்புற குடியிருப்புக்களைச் சூழ வாழும் சமுதாயத்தினருக்கு வீடமைப்புத் தீர்வுகளைப் பெற்றுக் கொடுத்தல், சமுதாயத்தை பொருளாதார மற்றும் சமூக, கலாசார ரீதியில் வலுவூட்டல் மற்றும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல் போன்ற பணிகளுக்காக 2008 இன் 36 ஆம் இலக்க நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்திற்கமைய இந்த அதிகார சபை தாபிக்கப்பட்டது.

## 7.3 கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை

கூட்டாட்சி ஆதனங்களில் வசிக்கின்றவர்களின் பயன்கள் மற்றும் நலன்புரிக்கு பொருத்தமானவாறு நிர்மாணிப்புகள் மற்றும் மேற்படி ஆதனங்களை முறையாக நிருவகித்தல் மற்றும் முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களை பாதிப்புத் ஆதனங்களைப் பராமரிப்புச் செய்தல் ஆகிய பணிகளை ஒழுங்குறுத்துவதற்காக 2003 இன் 24 ஆம் இலக்க பொதுவசதிகள் சபை (திருத்தச்) சட்டத்தின் மூலம் ஒழுங்குறுத்தும் அதிகார சபையொன்றாக கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை தாபிக்கப்பட்டது. மேலும் 1982 இன் 45 ஆம் இலக்க, 2003 இன் 39 ஆம் இலக்கச் சட்டங்கள் மூலம் திருத்தியமைக்கப்பட்ட இருப்பிடக் கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தின் நியமங்களை ஒழுங்குறுத்துவதும் இதன் முக்கிய நோக்கமாகும்.

## 7.4 ஓ.ன் வீவ் அபிவிருத்தி தனியார் கம்பனி

இலங்கையின் ஆதன அபிவிருத்திச் சந்தையின் முன்னோடி ஆதன அபிவிருத்திக் கம்பனியாக மாற்றியமைக்கும் நோக்கத்துடன் 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிப் பதிவுச் சட்டத்தின் கீழ் தனியார் கம்பனியொன்றாக பதிவு செய்யப்பட்டுள்ளது. (பதிவு இலக்கம் ீஏ 17667). பின்னர் இது 2007 இன் 07 ஆம் இலக் கம்பனிப் பதிவுச் சட்டத்திற்கு அமைய மீளப் பதிவு செய்யப்பட்டது.
தனியார் கம்பனி என்றவகையில் வினைத்திறனை பிரதானமாகக் கொண்ட இந்தக் கம்பனி இன்று வீடமைப்புத் துறையில் குறிப்பிடத்தக்களவான மாற்றத்தை ஏற்படுத்தி

வீடமைப்புத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

## 7.5 கட்டிடங்கள் திணைக்களம்

1849 ஆம் ஆண்டு அரசாங்க வேலைகள் திணைக்களம் ஆக ஆரம்பிக்கப்பட்ட கட்டிடத் திணைக்களம் 1969 இல் "ஏ" தரத்தைச் சேர்ந்த திணைக்களமொன்றாக தாபிக்கப்பட்டதுடன், அரசாங்க வேலைவகள் திணைக்களம் இல்லாதொழிக்கப்பட்டதை அடுத்து, அரசாங்க கட்டிட நிர்மாணத் துறையிலுள்ள ஒரே அதிகார அமைப்பாகவும், ஆலோசனை நிறுவனமாகவும் கருதப்படுகின்றது.

மாவட்ட பொறியியல் அலுவலகங்கள் 27 இன் மூலம் நாடு முழுவதிலும் கட்டிடக் கலை ரீதியாக மற்றும் பொறியியல்சார் நிர்மாணிப்புக்கள், நிர்மாணிப்பு, பராமரிப்புச் செய்தல், கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குவதன் மூலம் அரச துறையின் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக சிறந்ததொரு சேவையை ஆற்றிவருகின்றது.

## 7.6 அரசாங்க தொழிற்சாலை திணைக்களம்

அரச நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு இயந்திரப் பொறியியல் துறையில் உலோக மற்றும் தச்சுக் கைத்தொழில்சார்ந்த வேலைகள், பொருட்கள் மற்றும் சேவைகளை விநியோகிக்கும் பணிகள் மற்றும் இயந்திரப் பொறியியலாளர்களுக்கு வேலைத்தளங்களின் உற்பத்தி மற்றும் வேலைகள் சம்பந்தமான செயன்முறைப் பயிற்சிகளை பெற்றுக் கொடுக்கும் நோக்கத்துடன் அரசாங்க தொழில்சாலை திணைக்களம் செயற்பட்டு வருகின்றது.

## 7.7 நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை

2014 இன் 33 ஆம் இலக்க நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இந்த அதிகார சபை தாபிக்கப்பட்டது. நிர்மாணக் கைத்தொழில் துறையின் நடவடிக்கைகளை ஒழுங்குறுத்தல், பதிவுசெய்தல், முறைப்படுத்தல் மற்றும் தரப்படுத்துவது இந்தச் சட்டத்தின் பிரதான நோக்கங்களாகும்.

நிர்மாணக் கைத்தொழிலுக்கான தேசிய சபையொன்றைத் தாபித்தல், நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி நிதியத்தைத் தாபித்தல், நிர்மாணக் கைத்தொழில் சம்பந்தமான தொழில் வல்லுநர்கள், உற்பத்தியாளர்கள், வழங்குநர்கள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் கலைஞர்களின் அபிவிருத்தி மற்றும் நலன்புரிக்கான ஏற்பாடுகளைச் செய்தல், நிர்மாண நடவடிக்கைகள் சம்பந்தமான பிணக்குகளைத் தீர்த்துவைத்தல், நிர்மாணக் கைத்தொழில் துறையில் மக்களின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கான ஏற்பாடுகளை உறுதி செய்தல் போன்ற பணிகளுக்காக அதிகார சபை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

## 7.8 இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம்

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் கீழ் பேணி வரப்படுகின்ற பகுதியளவான அரச நிறுவனமொன்றாகும்.

நிர்மாணிப்புத் துறையின் ஆலோசனைச் சேவைகளை வழங்குதல், பொறியியல் சேவையை வழங்குதல், நிர்மாணிப்பு இயந்திர சாதனங்களை வழங்குதல், திட்டங்களை வடிவமைத்தல், முன்வலுவூட்டப்பட்ட கொன்க்றீட் அம்சங்களை உற்பத்தி செய்தல், பயிற்சியளித்தல் மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகள் போன்ற பணிகளை இந்நிறுவனம் நிறைவேற்றுகின்றது.

2009 ஆம் ஆண்டு முதல் ஐஎஸ்ஓ 9001:2000 தரச்சான்றிதழையும், ஐஎஸ்ஓ 14001:2004 சுற்றாடல் முகாமைத்துவச் சான்றிதழையும் பெற்று நிர்மாணத் துறையில் முன்னோடி நிறுவனமொன்றாக செயற்பட்டு வருகின்றது.

### 7.9 தேசிய இயந்திர சாதன நிறுவனம்

அரசாங்க நிறுவனங்களுக்கு மண் முங்கால் இடல் இயந்திரசாதனங்களைப் பெற்றுக் கொடுப்பதற்காக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் தேசிய இயந்திரசான நிறுவனம் 1992 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது. 2011 ஆம் ஆண்டு அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்தின் இயந்திர சாதனப் பிரிவாக தேசிய இயந்திர சாதன நிறுவகம் அதன் கீழ் கொண்டுவரப்பட்டதுடன், 2016 ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் மற்றொரு அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்தின் கீழேயே முகாமைத்துவ சபையின் கீழ் இயங்கிவருகின்றது.
வனசீவராசிகள், மிருகக் காட்சிசாலைகள், நீர்ப்பாசனம், கரையோரப் பாதுகாப்பு மற்றும் புகையிரதத் திணைக்களத்தினால் கையளிக்கப்பட்ட விசேட ஒப்பந்தங்களுடன் தேசிய இயந்திரசாதன நிறுவனமானது, படிப்படியாக முன்னேற்றமடைந்து வருகின்றது. அச்சுத் தொழில்வல்லுனர்கள், பயிற்றப்பட்ட ஊழியர்கள், தொழிலாளர் மட்டத்திலான ஊழியர்கள் 609 பேரைக் கொண்ட பதவியணியினர் இதில் சேவையாற்றுகின்றனர். மேலும், கனரக இயந்திர சாதனங்களைக் கொண்டதாகவும், நாடு முழுவதிலும் சகல மாவட்டங்களிலும் சேவை வழங்கும் டிப்போக் கட்டமைப்புக்களைக் கொண்டதாகவும், ஒவ்வொரு மாகாணத்திலும் அமைந்துள்ள சகல வசதிகளையும் கொண்ட இயந்திர வேலைத்தளங்களைக் கொண்டதாகவும் உள்ளது.

### 7.10 அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனம்

1957 இன் 49 ஆம் இலக்க அரசாங்கக் கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் 1971 ஒக்டோபர் 01 ஆம் திகதி பொறியியல் நிறுவனமொன்றாகத் தாபிக்கப்பட்டதுடன் தற்போது வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் கீழ் இயங்கிவருகின்றது.

முதற்தர பொறியியல் நிறுவனம் என்ற வகையில் பாலங்கள், பெருந்தெருக்கள், கட்டிடங்கள், சுரங்கப் பாதைகள், நீர்ப்பாசனம் மற்றும் நீர் வழங்கல் திட்டங்கள் போன்றவற்றைத் திட்டமிடுதல், வடிவமைத்தல் மற்றும் நிர்மாணிப்பதன் மூலம் இந்த நாட்டின் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திக்கு பெரும் பங்களிப்பினை வழங்கி வருவதுடன் பாலங்களை நிர்மாணித்தல் தொடர்பில் இலங்கையிலுள்ள முக்கிய நிறுவனமாகவுள்ளது. அவ்வாறே சுரங்கப் பாதைகளை நிர்மாணிக்கும் ஆற்றலைக் கொண்டுள்ள ஒரே இலங்கை நிறுவனமும் இந்தக் கூட்டுத்தாபனமாகும்.

நிர்மாணப் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையினால் இந்தக் கூட்டுத்தாபனம் ஊ1 தரத்தைச் சேர்ந்த நிர்மாணிப்பு நிறுவனமாக பதிவு வழங்கப்பட்டுள்ளதுடன் மேற்படி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட நிர்மாணிப்புச் செயலாற்றுகை பற்றிய விருதையும் பெற்றுள்ளது.

ஐளுழு 9001:2008 தரச்சான்றிதழை பெற்றுக் கொண்டுள்ள இக்கூட்டுத்தாபனம் நிர்மாணிப்புகளை உரிய தரநியமங்களுக்கு அமைவாகவே மேற்கொண்டு வருகின்றது.

பொறியியல் பணிகளுக்குத் தேவையான முன் வலுவூட்டப்பட்ட முன்பூர்த்தி செய்யப்பட்ட கொன்க்றீட் பாலங்கள், மின் கம்பங்கள், ஏனைய முன்பூர்த்தி செய்யப்பட்ட அம்சங்ககளயும் உற்பத்தி செய்கின்றது. அத்துடன், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் சகல வீதி சமிஞ்கசக் கட்டமைப்புக்களையும் பராமரித்தல் மற்றும் புதிய கட்டமைப்புக்களை உருவாக்கும் பணிகளையும் கூட்டுத்தாபனம் மேற்கொண்டு வருகின்றது.

### 7.11 கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம்

1970 இன் 33 ஆம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தகக் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின் கீழ் கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம் 1971 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டது. இதனையடுத்து 1987 இன் 23 ஆம் இலக்க அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் அல்லது அரசாங்கத்திற்கு உரித்தான வர்த்தக நிறுவனங்களை பொதுக் கம்பனிகளாக மாற்றியமைக்கும் சட்டத்தின் கீழ் மற்றும் 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் 100மூ அரசாங்கத்திற்கு உரித்தான வரையறுக்கப்பட்ட பொறுப்புகளைக் கொண்டு பொதுக் கம்பனியாக இந்தக்

கூட்டுத்தாபனம் மாற்றியமைக்கப்பட்டது. 2007 ஆம் ஆண்டு வரையறுக்கப்பட்ட இலங்கை கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம் கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அலுவல்கள் அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது. மீண்டும் 2010 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 2007 இன் கம்பனிகள் சட்டத்தின் 07 ஆம் இலக்கத்தின் கீழ் மீள் பதிவு செய்யப்பட்டது.

கட்டிடப் பொருட்கள் மற்றும் நிர்மாணிப்பு உபகரணங்களை போட்டித்தன்மைமிக்க விலையில் நாடு முழுவதிலும் வழங்குகின்ற முன்னோடி அரச நிறுவனம் என்ற வகையில் சமுதாயத்தின் நம்பிக்கையை வென்று, அரச நிறுவனம் என்ற வகையில் சமூகப் பொறுப்பை நிறைவேற்றி வருகின்றது.

## 7.12 தேசிய வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி

2003 இன் 15 ஆம் இலக்க மற்றும் 2011 இன் 45 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தியமைக்கப்பட்ட 1997 இன் 07 ஆம் இலக்க வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் பிரிவின் கீழ் உரிமப்பத்திரம் பெற்ற விசேட வங்கியொன்றாகும். பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டுள்ள இந்த வங்கியின் சாதாரண பங்குகள் கொழும்பு பங்குச் சந்தைப் பரிமாற்றத்தின் பிரதான அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ளது.
பங்குரிமையாளர்களுக்கு பயன்களை உச்சளவானதாக்குதல், வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் தேவைகளை இலக்காகக் கொண்டு சேவைப் பங்களிப்பை வழங்குதல் மற்றும் எதிர்பார்ப்புக்களை தாண்டிச் சென்று புதுவிதமாக திருப்புதியுறச் செய்வது பிரதான நோக்கமாகும்.

## 7.13 நடுத்தர வருமான மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்கான துரித நிகழ்ச்சித்திட்டம்

2016 ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்ட இந்த நிகழ்ச்சித்திட்டமானது அரச மற்றும் தனியார் துறையில் சம்பளம் பெறுகின்ற நடுத்தர வருமானம் பெறும் குடும்பங்களுக்கு சகல வசதிகளையும் கொண்ட ஒரு வீட்டை உரித்தாக்கிக் கொடுக்கும் நோக்கத்துடன் ஒரு வீட்டை உரித்தாக்கிக் கொள்ளும் வழிமுறை இல்லாத மற்றும் வீடு இல்லாத அரச அல்லது தனியார் துறையில் சம்பளம் பெறுகின்ற நடுத்தர வருமனம் பெறுவோரான குடும்பங்களுக்கு வசதிகளை செய்துகொடுத்தல் மற்றும் ஒருங்கிணைப்புச் செய்வதன் மூலம் அவர்களின் சமூக நிலைத்திருத்தல் மற்றும் பொருளாதார சுபீட்சத்தை அடைந்துகொள்ளச் செய்வது இதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

# 8. நிதி ஏற்பாடுகள் (வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை பிரிவு)

2018 ஆம் ஆண்டு அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட ஒட்டுமொத்த நிதி ஏற்பாடுகள் மற்றும் மேற்படி நிதி ஏற்பாடுகளின் 2018.12.31 ஆம் திகதிக்கான முன்னேற்றம் பின்வருமாறு.

- அமைச்சின் ஒட்டுமொத்த நிதிசார் முன்னேற்றம்

| | மதிப்பீடு செய்யப்பட்ட ஏற்பாடு (ரூபா) | தேறிய (மொத்த) ஏற்பாடு (ரூபா) | உண்மைச் செலவினம் (ரூபா) |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 407,600,000.00 | 442,697,271.00 | 417,915,142.00 |
| மூலதனச் செலவினம் | 10,117,000,000.00 | 10,946,362,729.00 | 9,225,845,963.00 |
| **மொத்தம்** | **10,524,600,000.00** | **11,389,060,000.00** | **9,643,761,105.00** |

- **நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அமைய**

**நிகழ்ச்சித்திட்டம் 1 – செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்**

| | மதிப்பீடு செய்யப்பட்ட ஏற்பாடு (ரூபா) | தேறிய (மொத்த) ஏற்பாடு (ரூபா) | உண்மைச் செலவினம் (ரூபா) |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 252,600,000.00 | 245,237,271.00 | 225,805,142.00 |
| மூலதனச் செலவினம் | 11,000,000.00 | 11,000,000.00 | 7,926,396.00 |
| **மொத்தம்** | **263,600,000.00** | **256,237,271.00** | **233,731,538.00** |

**நிகழ்ச்சித்திட்டம் 2 – அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்**

| | மதிப்பீடு செய்யப்பட்ட ஏற்பாடு (ரூபா) | தேறிய (மொத்த) ஏற்பாடு (ரூபா) | உண்மைச் செலவினம் (ரூபா) |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 155,000,000.00 | 197,460,000.00 | 192,110,000.00 |
| மூலதனச் செலவினம் | 10,106,000,000.00 | 10,935,362,729.00 | 9,217,919,567.00 |
| **மொத்தம்** | **10,261,000,000.00** | **11,132,822,729.00** | **9,410,029,567.00** |

# அரசாங்க அலுவலர்களின் முற்பணக் கணக்கு

**கணக்கு இல.** - 123011

- 123012

-

**அங்கீகரிக்கப்பட்ட வரையறைகள் -** செலவின உச்ச வரையறை ரூ. 13,000,000.00

பெறுகைகளின் ஆகக் குறைந்த வரையறை ரூ. 6,000,000.00

வரவு நிலுவையின் உச்ச வரையறை ரூ. 50,000,000.00

**ஆண்டின் ஆரம்பத்தில் முன்கொண்டு சென்ற மீதி (2018.01.01) ரூபா 24,006,478.68**

**ஆண்டினுல் வரவு வைத்தல்** - 23011 ரூபா 8,326,454.00

123012 ரூபா 3,894,076.23

**ஆண்டினுள் செலவு வைத்தல்** - 123011 ரூபா 6,450,891.75

123012 ரூபா 3,562,236.00

**ஆண்டின் இறுதியில் மீதி (2018.12.31) ரூபா 26,213,881.16**

# 2018 ஆம் ஆண்டு அமுல்படுத்தப்பட்ட அபிவிருத்தி கருத்திட்டங்கள் சில



குருநாகல் கொட்டடவெஹெர மாதிரிக் கிராமம் மக்களிடம் கையளிக்கையில்



மொனராகலை சியம்பலான்டுவ தெவ்சிறிகம மாதிரிக் கிராமம் மக்களிடம் கையளிக்கையில்



யாழ்ப்பாணம் சாவகச்சேரி – நாவலர் தோட்டம் மாதிரிக் கிராமம் மக்களிடம் கையளிக்கையில்



ஆண் அழகன் திரு லூசன் புஷ்பராஜுக்கு ஒரு வீட்டை கையளிக்கையில்



ஹம்பாந்தோட்டை கொன்னொருவ – சத்சுருகம மாதிரிக் கிராமம் மக்களிடம்



ஹம்பாந்தோட்டை சூரியவெவ சந்தரெஸ்கம மாதிரிக் கிராமம் மக்களிடம்

# 9. அமைச்சின் முன்னேற்றம் (வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை பிரிவு)

## 9.1 நிருவாகப் பிரிவு

### ❖ அமைச்சின் பதவியணி

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சுக்கு 2018 ஆம் ஆண்டின் இறுதியில் அங்கீகரிக்கப்பட்டிருந்த ஒட்டுமொத்த பதவியணி 196 ஆகும் என்பதுடன், ஆண்டினுல் இலங்கை நிருவாக சேவைக்கு உரித்தான உதவிச் செயலாளர் (தாபன அலுவல்கள்) பதவி ஒன்றை அங்கீகரித்துக் கொள்ள அமைச்சுக்கு முடியுமாயிற்று. மேலும் அமைச்சின் அபிவிருத்திப் பணிகளை விஸ்தரிக்கத் தேவையானதாக இருந்த பணிப்பாளர் (காணி) பதவியையும் அங்கீகரித்துக் கொள்ள முடிந்தது.

அமைச்சில் நீண்டகாலமாக வெற்றிடமாக காணப்பட்ட இலங்கை பொறியியல் சேவைக்கு உரித்தான பணிப்பாளர் (நிர்மாணத் தொழில்நுட்பம்), பணிப்பாளர் (நகரக் குடியிருப்பு), உதவிப் பணிப்பாளர் (பொறியியல் சேவைகள்) ஆகிய பதவிகளையும், இலங்கை நிருவாக சேவைக்கு உரித்தான உதவிப் பணிப்பாளர் (வீடமைப்பு) பதவியையும், இலங்கை கணக்காளர் சேவைக்கு உரித்தான பிரதம நிதி அலுவலர் பதவியையும் 2018 ஆம் ஆண்டின் இறுதிக்குள் பூர்த்தி செய்துகொள்ள முடிந்தது.

எவ்வாறாயினும், மொழிபெயர்ப்பாளர் அலுலவர் மற்றும் தொழில்நுட்ப அலுலவர் ஒருவர் இந்த ஆண்டில் பதவி விலகியதுடன், அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் மற்றும் அபிவிருத்தி அலுவலர் பதவி வெற்றிடங்களை ஓரளவுக்கு பூர்த்தி செய்துகொள்ளவும் முடிந்தது. இதற்கமைய 2018.12.31 ஆம் திகதிக்கான மொத்த பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை 33 ஆகும்.

### ❖ அமைச்சரவை விஞ்ஞாபனங்களும் பாராளுமன்ற வினாக்களும்

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை ஆகிய விடயப்பரப்பிற்கு உரித்தானதாக இந்த அமைச்சினால் அமுல்படுத்தப்படுகின்ற பல்வேறு அபிவிருத்திப் பணிகள் மற்றும் நிருவாக நடவடிக்கைகளுக்கு 2018 ஆம் ஆண்டில் அமைச்சினால் 63 அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக 17அமைச்சரவைக் குறிப்புகளும் இந்த ஆண்டில் அமைச்சினால் சமர்ப்பிக்கப்படுள்ளன.

மேலும் அமைச்சின் விடயப்பரப்புக்கு உரித்தான விடயங்கள் சம்பந்தமாக 2018 ஆம் ஆண்டில் பாராளுமன்ற வினாக்கள் 03 கேட்கப்பட்டிருந்ததுடன், மேற்படி அனைத்து வினாக்களுக்கும் பதில் அனுப்ப அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டிருந்தது.

### ❖ பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு பதில் நடவடிக்கை மேற்கொள்ளுதல்

இந்த அமைச்சு தொடர்பில் பிரதானமாக பொதுமக்களின் கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்படுவது வீடமைப்புத்துறை சம்பந்தமான கோரிக்கைகள் தொடர்பிலாகும் என்பதுடன் ஊழியர்களின் சிக்கல்கள் மற்றும் தொழிற்சங்கங்களின் சிக்கல்கள் தொடர்பிலான முறைப்பாடுகளை சமர்ப்பிக்கின்ற சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன. குறிப்பாக, ஜனாதிபதி அலுவலகம், பிரதம அமைச்சர் அலுவலகம் மற்றும் பொது மனுக் குழு ஊடாகவும் மேற்படி கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

இவ் அனைத்துக் கோரிக்கைகள் தொடர்பிலும் தலையீடு செய்து நடவடிக்கை மேற்கொள்வதற்கு அமைச்சு தாமதிக்காது செயற்பட்டுள்ளதுடன், நிறுவனங்கள் மற்றும் தொழிற் சங்கங்கள் தொடர்பிலான சிக்கல்களுக்கு அமைச்சின் தலைமையில் சம்பந்தப்பட்ட தரப்பினர்களுடன் கலந்துரையாடி தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

❖ **பயிற்சி மற்றும் உற்பத்தித் திறன் செயற்பாடுகள்**

அமைச்சு மற்றும் அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்களில் தகவல் அலுவலர்கள் மற்றும் பெயரிடப்பட்ட அலுவலர்களுக்கு தகவல் அறியும் உரிமை பற்றிய ஏற்பாடுகள் சட்டம் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்று 2018.02.23-24 ஆம் திகதிகளில் அமைச்சில் நடாத்தப்பட்டது.

மேலும், அலுவலர்களின் தமிழ் மொழி உதவி வகுப்புக்களும் இந்த ஆண்டில் நடாத்தப்பட்டது. அத்துடன், அரச மற்றும் பகுதியளவிலான அரச பயிற்சி நிறுவனங்களினால் நடாத்தப்படுகின்ற விடயரீதியான பயிற்சிப் பாடநெறிகள், நிகழ்ச்சித்திட்டங்களில் 2018.12.31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் அலுவலர்கள் 40 பேரை பங்கேட்கச் செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறே வெளிநாட்டுப் பயிற்சி பாடநெறிகள் மற்றும் செயலம்வுகளில் இந்த அமைச்சின் பதவி நிலை தரத்தைச் சேர்ந்த அலுலவர்கள் 09 பேர் இந்த ஆண்டில் பங்கேற்றுள்ளனர்.

அத்துடன் பயிலுனர்கள் 09 பேருக்கு விடயரீதியான செயன்முறைப் பயிற்சியும் இந்த ஆண்டில் பெற்றுக் கொடுக்கப்பட்டது.

## 9.2 திட்டமிடல் பிரிவு

❖ **வருடாந்த செயற்றிட்டம் மற்றும்**

❖ ஒவ்வொரு வருடமும் அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் சம்பந்தமான செயற்பாடுகளையும் மதிப்பீடுகளையும் உள்ளடக்கியதாக வருடாந்த செயற்திட்டம் தயார் செய்யப்படுவதுடன், 2018 ஆம் ஆண்டுக்கும் அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்துள்ள நிறுவனங்கள் சம்பந்தமான வருடாந்த செயற்திட்டம் தயார் செய்யப்பட்டது.

❖ **முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள்**

வருடாந்த செயற்றிட்டத்திற்கமைய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் முறையாக அமுல்படுத்தப்படுவதை அவதானித்தல் மற்றும் மதிப்பீடு செய்யவென விடயப்பொறுப்பு கௌரவ அமைச்சரின் தலைமையில் தேசிய வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பிலான 34 முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் ஒழுங்குசெய்யப்பட்டன. நிர்மாண நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பில் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டங்கள் 03 ஆகும். வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறையின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை வினைத்திறனுடனும், விளைதிறன்மிக்கவாறும் நிறைவேற்றிக் கொள்ளத் தேவையான வழிகாட்டல்களை பெற்றுக்கொடுக்க இதன் மூலம் வாய்ப்புக் கிடைத்தது.

❖ **முன்னேற்ற அறிக்கைகளின் ஒருங்கிணைப்பு.**

தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்திற்கு மாதாந்த அடிப்படையிலும், கருத்திட்ட முகாமைத்தும் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்திற்கு காலாண்டு அடிப்படையில் 04 அறிக்கைகளும், சனாதிபதி செயலகம் மற்றும் பிரதம அமைச்சர் அலுவலகத்திற்கு காலாண்டு அடிப்படையில் 04 அறிக்கைகளையும் உரிய காலப்பகுதிகளுக்குள் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதற்கு மேலதிகமாக நிறுவனங்களின் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீட்டு அறிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்யவும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், சனாதிபதி செயலணிக்கு வடக்கு கிழக்கு மாகாணத்தின் முன்னேற்றம் பற்றிய 03 முன்னேற்ற அறிக்கைகளும் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

❖ **புதிய கருத்திட்டப் பிரேரணைகள்**

அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்கள் மூலம் 2018 ஆம் ஆண்டில் அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களுக்கு தேசிய திட்டமிடல்

திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை சம்பந்தமாக அமுல்படுத்த திட்டமிட்டுள்ள 17 கருத்திட்டப் பிரேரணைகளை திரைசேரியிடமிருந்து நிதியைப் பெற்றுக் கொள்வதற்காக தேசிய திட்டமிடல் திணைக்களத்திடம் சமர்ப்பிக்க அமைச்சுக்கு முடியுமாயிற்று. மேற்படி கருத்திட்டப் பிரேரணைகளின் மூலம் கோரப்பட்ட தொகை ரூ.மி. 60,000 ஆகும்.

❖ **அமைச்சின் முன்னேற்றம் மற்றும் எதிர்காலத் திட்டங்களை உள்ளடக்கிய அறிக்கை**

ஒவ்வொரு வருடமும் வரவு செலவுத்திட்ட குழுநிலை விவாதத்தின் போது சமர்ப்பிக்கப்படுகின்ற அமைச்சின் முன்னேற்றம் மற்றும் எதிர்காலத் திட்டங்களை உள்ளடக்கிய அறிக்கை இந்த ஆண்டும் அமைச்சு மற்றும் அதன் கீழ் இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்களின் முன்னேற்றம் மற்றும் கருத்திட்டப் பிரேரணைகள், திட்டங்களுடன் தயார் செய்யப்பட்டு உரிய நேரத்திற்குள் சமர்ப்பிக்க அமைச்சுக்கு இயலுமாயிற்று.

❖ **அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுக் கொள்ளல்.**

ஒரு மாவட்டத்திற்கு ஒரு கருத்திட்டம் என்ற வகையில் 25 மாவட்டங்களிலும் 600 வீடுகளை நிர்மாணிப்பதற்கான யாவருக்கும் புகலிடம் கிராம சக்தி மாதிரிக் கிராமம் வீடமைப்புக் கருத்திட்டத்திற்கு இந்திய அரசுக்கும், இலங்கை அரசுக்கும் இடையே 2017 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 26 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு அமைய இதற்கு ரூ.மி. 300 நிதி உதவியின் கீழ் இத்திட்டம் 25 மாவட்டங்களில் அமுல்படுத்தப்படவுள்ளது.

மேலும் தென் மாகாணத்தில் 600 வீடுகளை நிர்மாணிக்கின்ற யாவருக்கும் புகலிடம் கிராம சக்தி மாதிரிக் கிராமம் கருத்திட்டத்திற்கும் 2017 அக்டோபர் மாதம் 26 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு அமைய அக்கருத்திட்டத்தின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டு வருகின்றன.

அநுராதபுரம் விலச்சிய பிரதேச செயலாளர் பிரிவில் எலபத்கமவில் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள சங்கைக்குரிய மாதுலுவாவே சோபித்த நாஹிமிகம கருத்திட்டத்திற்கு இந்திய அரசினால் ரூ.மி. 296.50 ஆன அன்பளிப்பின் மூலம் 153 குடும்பங்களுக்கு புதிய வீடுகளை நிர்மாணித்துக் கொடுத்தல், பல்தேவைக் கட்டிடமொன்றையும், பிக்குமாருக்கான தங்குமிடம் மற்றும் உணவு உட்கொள்ளும் மண்டபம் என்பவற்றை நிர்மாணித்தல், நூலகத்தை நவீனமயப்படுத்தல், நீர் விநியோகம், கிராமிய வாவியொன்றை நிர்மாணித்தல் போன்ற பல்வேறு அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், 2019 யூலை மாதம் இந்தக் கருத்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்படவுள்ளது.

## 9.3 வீடமைப்புப் பிரிவு

❖ **பொது மக்களின் கோரிக்கைகள்**

2018 ஆம் ஆண்டில் அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்ட பொது மக்களின் 4800 கோரிக்கைகள் விடயரீதியான சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடம் சமர்ப்பிக்கப்பட்டு அது தொடர்பில் விண்ணப்பதாரர்கள் அறிவுறுத்தப்பட்டார்கள்.

மேலும், “சனாதிபதிக்குக் கூறுங்கள்” இன் கீழ் கிடைத்திருந்த 4100 முறைப்பாடுகள் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களிடம் சமர்ப்பிக்கப்பட்டு, மேற்படி முறைப்பாடுகளை சமர்ப்பித்திருந்த தரப்பினர்களுக்கு அது பற்றி அறிவுறுத்துவதற்கும், தொலைபேசி ஊடாக பொது மக்கள் சமர்ப்பித்த பல்வேறு தவல்கள் பற்றிய கோரிக்கைகள் சம்பந்தமான விபரங்களைப் பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

### ❖ சட்டங்களைத் திருத்தியமைத்தல்

1982 இன் 45 ஆம் இலக்க மற்றும் 2003 இன் 39 ஆம் இலக்க திருத்தச் சட்டங்களின் மூலம் திருத்திய 1973 இன் 11 ஆம் இலக்க இருப்பிடக் கூறுகள் சொத்தாண்மை சட்டத்தின் ஏற்பாடுகள் காரணமாக ஒரு சில கூட்டாட்சி ஆதனங்களில் வசிப்பவர்களுக்கு அவற்றின் உரிமையைப் பெற்றுக் கொள்ளக்கூடியவாறு உரித்து நீக்கம் செய்ய முடியாதுள்ளது. இந்த சிக்கலுக்கு தீர்வாக 1999 இன் 04 ஆம் இலக்க இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மைச் சட்டம் (விசேட ஏற்பாடுகள்) அமுல்படுத்தப்படுள்ள போதும் குறித்த காலப்பகுதிக்குள் குறித்த சகல கூட்டாட்சி சொத்துக்களுக்கு உறுதிகளை வழங்க முடியாமை காரணமாக மீண்டும் இந்த சட்டம் 2018 இன் 23 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்டது.

### ❖ கொள்கைகளை வகுக்கும் பணிகள்

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சினால் சகல கிராம அலுவலர் பிரிவுகளையும் உள்ளடக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்ட2016 இன் வீடமைப்புத் தேவைகள் பற்றிய தரவு ஆய்வை பின்னணியாகக் கொண்டு புதிய இலக்குகளுடன் வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு அமுலில் உள்ள வீடமைப்புக் கொள்கைளை திருத்தியமைப்பது 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.
அதற்கமைய கல்விமான்கள் குழுவினால் தயார் செய்யப்பட்ட தேசிய வீடமைப்புக் கொள்கையானது அமைச்சரவியினால் உத்தேசிக்கப்பட்டுள்ளவாறு மீண்டும் திருத்திய இறுதி வரைவு தயார் செய்யப்பட்டது.
வீடமைப்புத் துறை தொடர்பில் 2018 ஆம் ஆண்டில் அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் மற்றும் குறிப்புக்கள் 26 சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், வேறு அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் மற்றும் குறிப்புக்கள் 14 தொடர்பிலான அவதானிப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

### ❖ உரித்து அல்லது உரிமையை பொறுப்பளித்தல்.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் வீடமைப்பு நோக்கத்துக்காக நீக்கம் செய்யப்பட்ட வீடுகள், காணிகள் 1600 இற்கு அறுதி உறுதி, குத்தகை உறுதிகளை வழங்க கௌரவ அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### ❖ வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மற்றும் நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை ஆகியன வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தும் பிரதானமான நிறுவனங்களாகும் என்பதுடன், யாவருக்கும் புகலிடம், மாதிரிக் கிராமம் நிகழ்ச்சித்திட்டம், விரு சுமிதுரு வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம், சொந்துரு பியச வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம், வட மாகாண வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம், மணலாறு வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம், சிறுநீரக நோயாளர்களுக்கான வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் கிராம சக்தி வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் ஆகியன இவற்றில் முக்கியமானவையாகும்.

யாவருக்கும் புகலிடம் வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2018 ஆம் ஆண்டின் இறுதிவரை 32228 வீடுகளின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. யாவருக்கும் புகலிடம் மாதிரிக் கிராமம் (கடன்) நிகழ்ச்சித்திட்டம், 40 ஆவது ஆண்டு நிறைவுக் கிராமம், கிராம சக்தி உதவி நிகழ்ச்சித்திட்டம், வட மாகாண மற்றும் மட்டக்களப்பு உதவி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் இந்திய உதவி நிகழ்ச்சித்திட்டம் என்ற வகையில் யாவருக்கும் புகலிடம் மாதிரிக் கிராமங்கள் 915 இன் நிர்மாணப் பணிகளை 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்க தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை நடவடிக்கை மேற்கொண்டது.

விரு சுமிதுரு வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2018 ஆம் ஆண்டில் 550 வீடுகள் மற்றும் 2017 இன் தொடர்ச்சியான 201 வீடுகளின் வேலைகளை நிறைவு செய்வதற்கு ரூ.மி. 215.10

ஆன தொகை மதிப்பீடு செய்யப்பட்டதுடன், 2018.12.31 ஆம் திகதிவரை 510 வீடுகளின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இவற்றில் 251 வீடுகளின் வேலைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. செலவிடப்பட்ட மொத்தத் தொகை ரூ.மி. 216.51 ஆகும்.

சொந்துரு பியச வீடமைப்பு வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கடன் வழங்குவது மேற்கொள்ளப்படுவதுடன், கடன் வழங்கும் பிரதான தகவுதிறனாக இருப்பது வீட்டின் பரப்பளவை 750 சதுர அடிகளில் இருந்து 1500 சதுர அடிகள் வரை விஸ்தரிக்கப்பட்டதுடன், அதற்கமைய இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கி மற்றும் மக்கள் வங்கியின் நிதி உதவியைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன் கீழ் ஒரு குடும்பத்திற்கு ரூபா 200,000 வரையான கடன் தொகை 6.57% ஆன வருடாந்த சலுகை வட்டி வீதத்தின் கீழ் வழங்கப்பட்டு வருகின்றது. அதற்கமைய 2018.12.31 ஆம் திகதிக்கு 3827 குடும்பங்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டு வீடமைப்புத் தேவைகளைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

விசிறி வீடமைப்புக் கடன் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் வீடமைப்புத் தேவையை பூர்த்தி செய்தல் மற்றும் பகுதியளவில் பூர்த்தி செய்யப்பட்ட வீடுகளை மேம்படுத்துவது இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. 02 இலட்சம் ரூபா எனும் உச்சளவுக்கு உட்பட்டு சலுகை வட்டி அடிப்படையில் கடன் வழங்கப்படுகின்றது. 2018 ஆம் ஆண்டில் 20958 குடும்பங்களுக்கு ரூ.மி. 2448.20 ஆன தொகை இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

### ❖ உலகக் குடியிருப்புத் தினம

ஒவ்வொரு வருடமும் அக்டோபர் மாதம் முதலாவது திங்கட்கிழமை உலக குடியிருப்புத் தினமாக (று;ழசடன ர்யடிவையவ னுயல) ஐக்கிய நாடுகள் அமைப்பினால் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய இம்முறை உலகக் குடியிருப்புத் தினம் அக்டோபர் மாதம் 01 ஆம் திகதி திங்கட்கிழமை கொண்டாடப்படுகின்றது. ஐக்கிய நாடுகள் அமைப்பினால் 1985 இன் வருடாந்த கூட்டத்தொடரின் போது சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணைக்கு அமைய 1986 ஆம் ஆண்டு முதல் கடந்த 31 வருட காலப்பகுதிக்குள் வீடமைப்பு மற்றும் குடியிருப்புத் துறை தொடர்பிலான பல்வேறு தொணிப்பொருள்களின் கீழ் உலகக் குடியிருப்புத் தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது.

உலகக் குடியிருப்புத் தினத்தை உலகம் முழுவதிலும் அமுல்படுத்துகின்ற ஐக்கிய நாடுகளின் மனிதக் குடியிருப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் (ருN-ர்யடிவையவ) இலங்கை முகவராண்மை நிறுவனமாக வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு காணப்படுகின்றது. அதற்கமைய இந்த அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்கள் மற்றும் வீடமைப்பு மற்றும் குடியிருப்பு அபிவிருத்திக்கு இசைவாக நடவடிக்கை மேற்கொள்ளும் ஏனைய அமைச்சுக்கள், அரச நிறுவனங்கள் மற்றும வேறு அமைப்புக்களின் ஒத்துழைப்பைப் பெற்று உலக குடியிருப்புத் தினம் மற்றும் அன்றைய தினம் முதல் ஆரம்பமாகும் உலகக் குடியிருப்பு வாரத்தை முன்னிட்டு கடந்த ஆண்டுகளில் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள், சமுதாயத்தை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள், சிறுவர் நிகழ்ச்சித்திட்டங்கள், தொழில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் உட்பட பல நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.

ஆரம்பத்தில் உலகக் குடியிருப்புத் தினத்தின் தொணிப்பொருள் கிராமிய வீடமைப்பு அபிவிருத்தியை மையமாகக் கொண்டதாக இருந்த போதிலும், அண்மைக் காலத்தில் நகரக் குடியிருப்பு அபிவிருத்தி தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய 32 ஆவது உலகக் குடியிருப்புத் தினமானது, “ஆரனைஉியட ளுழடனை று யளவந ஆயயெபநஅநவெ” எனும் தொணிப்பொருளை மையமாகக் கொண்டு 2018.10.01 ஆம் திகதி குருநாகல் மாவட்டத்தின்

நிகவெரட்டிய கொபைகனே ஜகத் நிவஹன்கம மாதிரிக் கிராமத்தை மையமாகக் கொண்டு நடாத்தப்பட்டதுடன், இந்த அமைச்சின் கீழுள்ள சகல நிறுவனங்களினதும் ஒத்துழைப்புடன் யாவருக்கும் புகலிடம் மாதிரிக் கிராமங்களை மக்களிடம் கையளித்தல், குடியிருப்புமயமாக்கலை தொணிப்பொருளாகக் கொண்டு நாடளாவிய ரீதியில் மாணவர்கள் மத்தியில் சித்திரம், கட்டுரை, நாடகம் போன்ற போட்டிகளை நடாத்தல், குடியிருப்புமயமாக்கல் பற்றி அலுலவர்கள், சமுதாயத்தினர் மற்றும் சிறுவர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள், குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புக்களில் வாழும் மக்களுக்கான தொழில்முயற்சிசார் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயலமர்வுகள், கூட்டாட்சி எண்ணக்கரு (தொடர்மாடிவீடு மற்றும் இருப்பிடக்கூறுகள்) பற்றி அலுவலர்கள், பொது மக்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள், வீடுகளை நிர்மாணிக்கும் போது எதிர்கொள்ள வேண்டி நேரிடும் சிக்கல்கள் பற்றி நடமாடும் சேவை உட்பட பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.

அத்துடன் 2018.10.01 ஆம் திகதி முதல் 2018.10.07 வரையான உலகக் குடியிருப்பு வாரத்தினுள் நிறுவன மட்டத்தில் பல்வேறு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் நாடு முழுவதிலும் அமுல்படுத்தப்பட்டன.

- **கிராமிய வீடமைப்புக் குழுக்களைத் தாபித்தல்**

  நாடு முழுவதிலும் அமைந்துள்ள கிராம அலுலவர் பிரிவுகள் 14023 இல் 2018 ஆம் ஆண்டின் இறுதியளவில் 11292 கிராம அலுவலர் பிரிவுகளில் கிராமிய வீடமைப்புக் குழுக்கள் தாபிக்கப்பட்டுள்ளன.

- **தகவல் அறியும் உரிமை பற்றிய சட்டத்தின் கீழ் தகவல்களைப் பெற்றுக் கொடுத்தல்**

2016 இன் 12 ஆம் இலக்க மேற்படி சட்டத்திற்கு அமைய அமைச்சுக்கு கிடைத்திருந்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை இருப்பத்து நான்காகும் (24). இவற்றில் இரண்டு அமைச்சின் விடயப்பரப்புக்கு ஏற்புடையதாகாமை காரணமாக உரிய நிறுவனங்களிடம் சமர்ப்பிக்கப்பட்டதுடன், ஏனைய விண்ணப்பங்கள் தொடர்பில் உரிய தகவல்கள் அமைச்சினால் மற்றும் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொண்டு உரிய ஆட்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டன.

- **நடுத்தர வகுப்பைச் சேர்ந்த வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி**

அரச மற்றும் தனியார் துறையின் பங்கேட்புடன் நடுத்தர வருமானம் பெறுவோருக்காக தாங்கிக் கொள்ளக்கூடிய விலையில் வீடுகளைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கத்துடன் 5 இலட்சம் வீடுகளை நிர்மாணிப்பது இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும். அதற்கமைய இதுவரை 4 இலட்சம் வீடுகளை நிர்மாணிக்கும் வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கான காணிகள் அரசாங்கத்தினால் வழங்கப்படுவதுடன், உட்கட்டமைப்பு வசதிகளை வீடமைப்புக் கருத்திட்டம் வரை பெற்றுக் கொடுப்பதும் அச்சேவைகளை வழங்கும் நேர்வரிசை அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களில் வீடுகளை நிர்மாணித்தல் மற்றும் விற்பனை செய்வது குறித்த வீடமைப்புக் கருத்திட்டத்திற்கான நிதியை முதலீடு செய்யும் முதலீட்டாளரின் பணியாகும் என்பதுடன், கண்காணிப்புச் செய்வதானது வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சுடன் இணைந்து தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் மேற்கொள்ளப்படுகின்றது. நிர்மாணிப்பு ஆரம்பிக்கப்பட்ட ஒவ்வொரு வீடமைப்புக் கருத்திட்டத்திலும் நிர்மாணிக்கும் வீட்டு அலகுகளின் எண்ணிக்கையில் 80% நடுத்தர வருமானம் பெறுவோருக்காக ஒதுக்கப்படுவதுடன், அவ்வாறான ஒரு வீட்டின் உச்சளவான விலை ரூ.மி. 5 ஆகும். எஞ்சிய 20% ஆன வீடுகளை சந்தையின் தேவைகளுக்கு அமைய நிர்மாணித்து விற்பனை செய்ய முதலீட்டாளருக்கு வாய்ப்புக் கிடைக்கின்றது நிர்மாணிக்கும் ஒவ்வொரு வீடமைப்புக் கருத்திட்டமும் நடுத்தர வருமானம்

பெறும் சமுதாயத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியவாறான பொது வசதிகளைக் கொண்டதாக இருக்கும்.

நடுத்தர வருமானம் பெறும் அரச மற்றும் தனியார் துறையின் ஊழியர்களுக்கு தொடர்மாடி வீடுகளை நிர்மாணிக்கும் கருத்திட்டம் நாடு முழுவதிலும் பிரதான நகரங்கள், நெடுஞ்சலைகளுக்கான நுழைவுப் பாதைகள் அமைந்துள்ள வீதிகள் மற்றும் புகையிரத நிலையங்களுக்கு அருகேயுள்ள உப நகரங்கள், பிரதான வீதிகளுக்கு அருகே உள்ள நகரங்களை மையமாகக் கொண்டு வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் கீழுள்ள தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் அமுல்படுத்தப்படுகின்றது. இந்தக் கருத்திட்டத்தின் கீழ் குறிப்பாக அரச மற்றும் தனியார் துறையில் சேவையாற்றுகின்ற நடுத்தர வருமானம் பெறுவோருக்கு சகல வசதிகளையும் கொண்ட தொடர்மாடி வீடொன்றை சலுகைக் கடன் வசதிகளுடன் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளது.

நடுத்தர வருமானம் பெறுவோர் தாங்கிக் கொள்ளக்கூடிய விலையில் நகர மற்றும் பகுதியளவிலான நகர் பகுதிகளில் 05 இலட்சம் வீடுகளை நிர்மாணிப்பது இந்தக் கருத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது. தனியார் துறையினரால் அமுல்படுத்தப்படும் இத்திட்டத்தின் கீழ் வேலைத்தளம் வரையான உட்கட்டமைப்பு வசதிகள் அரசாங்கத்தினால் பெற்றுக் கொடுக்கப்படும்.
இதுவரை ஆரம்பிக்கப்பட்டுள்ள வீடமைப்பு கருத்திட்டங்களாவன, சீ பிரீஸ் வீடமைப்புக் கருத்திட்டம் - வாத்துவை (196 வீடுகள்), கிறீன் வெலி வீடமைப்புக் கருத்திட்டம் - அத்துருகிரிய (352 வீடுகள்), மவுன்ட் கிளிபர்ட் கருத்திட்டம் - ஹோமாகம் (860 வீடுகள்), லாவன்யா ஹயிட்ஸ் கருத்திட்டம் - ராகம (124 வீடுகள்) ஆகியனவாகும்.

ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள வீடமைப்புக் கருத்திட்டங்களாவன, குண்டசாலை, யக்கல, அத்தனகல்ல ஆகியனவாகும்.

இந்த நிகழ்ச்சித்திட்டதிற்கு 2018 ஆம் ஆண்டில் ஆறு (06) காணிகள் அமைச்சரவையினால் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு சாட்டுதல் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 9.4 நிர்மாணத் தொழில்நுட்பப் பிரிவு

நிர்மாணக் கைத்தொழில் தொடர்பிலான தொழில்சார் நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்படுகின்ற சகல சட்ட வரைவுகளையும் திருத்தியமைத்து சிபாரிசுகளைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் மேற்படி நிறுவனங்களின் ஏனைய சிக்கல்கள் சம்பந்தமாக உரிய காலப்பகுதிகளுக்குள் தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அமைச்சுக்கு நிர்மாணிப்பு நிறுவனங்களிடமிருந்து கிடைக்கின்ற வீசா கோரிக்கைகள் தொடர்பில் வெளிநாட்டு தொழில்வல்லுனர்கள் 08 பேர் மற்றும் நேபாள ஊழியர்கள் 223 பேருக்கு 2018 ஆம் ஆண்டில் சிபாரிசுகள் வழங்கப்பட்டுள்ளன.

நிர்மாணக் கைத்தொழில் சபை சட்டம் தொடர்பில் அவதானிப்புச் செய்வதற்கு சட்ட மாஅதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், கட்டிடங்கள் சேவைகள் பொறியியலாளர் மற்றும் தொழில்நுட்ப நிறுவகத்தை கூட்டிணைப்புச் செய்யும் சட்டத்துக்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடம் அவதானிப்புக்கள் கோரப்பட்டுள்ளன.

ீழுடைஉல ழக ர்பைா சளைந டீரடைனபைெ மற்றும் அது தொடர்பிலான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளுக்கான ஆரம்ப வரைவு பிரதம அமைச்சர் அலுவலகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் சகல நிறுவனங்கள் தொடர்பிலும் இதுவரை தனித்தனியே நடாத்தப்பட்ட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களின் எண்ணிக்கை 42 ஆகும் என்பதுடன், சமர்ப்பிக்கப்பட்டுள்ள அமைச்சரவை

விஞ்ஞாபனம் /குறிப்புக்களின் எண்ணிக்கை 20 ஆகும்.

### 9.4.1 நகரக் குடியிருப்புப் பிரிவு

அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களினால் 2018 ஆம் ஆண்டு சமா்ப்பிக்கப்பட்ட 20 கருத்திட்டப் பிரேரணைகள் தொடா்பில் ஆரம்ப ஆய்வுகள் நடாத்தப்பட்டு தேசிய திட்டமிடல் திணைக்களத்திடம் சமா்ப்பிப்பதற்காக திட்டமிடல் பிரிவிடம் பொறுப்பளிக்கப்பட்டது.

## 9.5 தேசிய வீடமைப்பு ஆணையாளா் பிரிவு

1973 இன் 01 ஆம் இலக்க வீடமைப்பு சொத்தாண்மை உச்ச வரம்புச் சட்டத்தின் கீழ் அரசாங்கத்திற்குச் பொறுப்பேற்கப்பட்ட வாடகைக் குடியிருப்பாளா்களுக்கு உறுதிகளைப் பெற்றுக்கொக்கும் கருத்திட்டத்தின் கீழ் 2018 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட உறுதிகளின் எண்ணிக்கை 05 ஆகும். 40 வெளிக்கள விசாரணைகள் நடாத்தப்பட்டுள்ளன.

அரசாங்கத்திற்குப் பொறுப்பேற்றுக் கொள்ளப்பட்ட வீடுகளின் உரிமையாளா்களுக்கு நட்டஈடு வழங்குவதும் பாரியளவில் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

பல்வேறு வீட்டு ஆதனங்கள் தொடா்பில் எழுந்துள்ள சிக்கல்களின் போது உரிய ஆரம்க கோப்புகள், ஆவணங்கள், வா்த்தமானி அறிவித்தல்கள் மற்றும் வரைபடங்கள் போன்றன இல்லாமை காரணமாக விசாரணைகளை நிறைவு செய்துகொள்ள முடியாமை மற்றும் விலைமதிப்புச் சபை இதுவரை தாபிக்கப்படாதுள்ளமையானது நோக்கத்தை அடைந்துகொள்வதில் சவாலாக இருந்தது.

## 9.6 நிதிப் பிரிவு

### கட்டுநிதி முகாமைத்துவம்

அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு தமது இலக்குகள் மற்றும் பொதுவாக அமைச்சின் இலக்குகளை அடைந்துகொள்வதற்கான நிதி வளங்களை வருடாந்த ஒதுக்கீட்டுச் சட்டத்தின் மூலம் பெற்றுக் கொடுக்கப்பட்ட வரையறைகளுக்குள் முகாமைத்துவம் செய்து 85% ஆன இலக்கினை அப்போது நிலவிய அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடி நிலைமைக்குள் அடைந்துகொண்டமை பாரியதொரு வெற்றியாகும்.

### நிதி அறிக்கையிடல்

நிதி அமைச்சு, அரசாங்க கணக்குகள் திணைக்களம் மற்றும் திறைசேரி நடவடிக்கைகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்டிருந்த அறிவுரை மற்றும் சுற்றறிக்கைகளைப் பின்பற்றி மாதாந்தம், வருடாந்தம் நிதி அறிக்கையிடல் நடவடிக்கைகளை குறைபாடுகள் இன்றி மற்றும் தாமதமின்றி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது.

### கணினிமயப்படுத்தப்பட்ட நிதிக் கணக்கீட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

நிதி அமைச்சுக்கு இணைந்த மிலோதா நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட கணினிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு கருத்திட்டமான ஐவஅளைஇற்கு அலுவலா்களை பங்கேட்கச் செய்ய முடிந்தன் காரணமாக மென்மேலும் வளா்ச்சியடைந்த நிதி அறிக்கையிடலுக்கான வாய்ப்புக்கள் கிடைத்துள்ளன.

### சொத்து முகாமைத்துவம்

முன்னா் காணப்பட்ட வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் கீழ் காணப்பட்ட சகல சொத்துக்களையும் திறைசேரியுடன் வலையமைப்புச் செய்துகொள்ள முடிந்ததுடன், அண்மையில் இணைக்கப்பட்ட கலாசார பிரிவின் சொத்துக்களையும் இந்த ஆண்டினுள் கூட்டிணைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

### அமைச்சின் அலுவலா்களுக்கு இடா் மற்றும் ஏனைய கடன்களைச் செலுத்தல்

திறைசேரியுடன் பேணிவரப்பட்ட நல்ல உறவு காரணமாக அலுவலா்களுக்கு கடன் செலுத்தத் தேவையான கட்டுநிதியை ஒதுக்கீட்டுச் சட்ட வரையறைக்குள் பெற்றுக் கொள்ள முடிந்ததுடன், இதன் காரணமாக 2018 ஆம் ஆண்டில் சகல அலுவலா்களினதும் கடன் விண்ணப்பங்களுக்கான கடன் தொகைகளை செலுத்தி முடிக்க இயலுமாயிற்று.

## 2018 ஆம் ஆண்டு அமுல்படுத்தப்பட்ட அபிவிருத்தி கருத்திட்டங்கள் சில



கராத்தே வீராங்கனை விஹங்கி சாசென்காவுக்கு ஒரு வீட்டை கையளித்த போது



களுத்துறை புலத்சிங்கல நதீஜயகம மாதிரிக் கிராமத்தை மக்களிடம் கையளிக்க போது



அநுராதபுரம் ரம்பேவ சேகிரிகம மாதிரிக் கிராமத்தை மக்களிடம் கையளித்த போது



ரத்னபுரி வெலிகெபொல செனெஹஸகம மாதிரிக் கிராமத்தை மக்களிடம்



வவுனியா சிவாநகர் மாதிரிக் கிராமத்தை மக்களிடம் கையளித்த போது



ஹம்பாந்தோட்டை சிறிபோபுர ஸ்ரீ அமரதேவகம மாதிரிக் கிராமத்தை மக்களிடம் கையளித்த போது

# 10. 2018ஆம் ஆண்டு அமைச்சு எதிர்நோக்கிய சவால்கள்

❖ **நிரந்தர பதவி வெற்றிடங்களை நிரப்ப முடியாமை.**

அமைச்சுக்கு அங்கீகரிக்கப்பட்ட நிரந்தர பதவிகளின் வெற்றிடங்களை முறையாக நிரப்புவதற்கு அமைச்சுக்கு 2018 ஆம் ஆண்டில் ஆற்றல் கிடைத்த போதும் மொழிபெயர்ப்பாளர் மற்றும் தொழில்நுட்ப அலுவலா் ஆகியோர் இந்த ஆண்டில் பதவி விலகியதன் காரணமாக மேற்படி துறைகளில் அன்றாட பணிகளில் தாக்கம் ஏற்பட்டது.

மேலும், கணக்காய்வு மற்றும் விசாரணை நடவடிக்கைகளுக்கு அனுபவம்வாய்ந்த பதவியணி இல்லாமை காரணமாக கணக்காய்வு நடவடிக்கைகளில் பின்னடைவு காணப்பட்டது.

❖ **சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்கு போதியளவு நிதி ஏற்பாடுகள் கிடைக்காமை.**

அமைச்சுக்குத் தேவையான சொத்துக்களை கொள்வனவு செய்வதற்கு போதியளவு ஏற்பாடுகள் கிடைக்காமை காரணமாக 2018 ஆம் ஆண்டு அமைச்சின் நாளாந்த பணிகளுக்குத் தடை ஏற்பட்டது. அமைச்சில் சேவையாற்றுகின்ற அலுவலா்களின் உபயோகத்திற்கு போதியளவில் கணினி இயந்திரங்கள், அச்சு இயந்திரங்கள் மற்றும் பிரதி பண்ணி இயந்திரங்கள் காணப்படவில்லை என்பதுடன், அவற்றைக்

கொள்வனவு செய்வதற்கும் போதியளவு ஏற்பாடுகள் அமைச்சுக்கு ஒதுக்கி இருக்காமை காரணமாக தற்போது பயன்படுத்துகின்ற உபகரணங்களை வினைத்திறனற்ற மட்டத்தில் பயன்படுத்த வேண்டி ஏற்பட்டது. எனவே மேற்படி

உபகரணங்களை அடிக்கடி புதுப்பிக்க வேண்டி ஏற்பட்டமை காரணமாக நாளாந்த பணிகளை முறையாக நிறைவேற்றிக் கொள்வது கடும் சவாலாக அமைந்தது.

❖ **வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தும் போது எதிர்நோக்கிய சவால்கள்.**

தேசிய வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளை விளைதிறன்மிக்கவாறு மற்றும் 100% ஆன வினைத்திறனுடன் ஈடுபடுத்துவதற்கான சகல திட்டங்களும் தயாா் செய்யப்பட்டிருந்த போதிலும் அரசியல் துறையில் ஏற்பட்ட குழப்ப நிலை காரணமாக 85%ஆன முன்னேற்றம் தொடா்பில் திருப்தியுற வேண்டி ஏற்பட்டது.

அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை விரிவடைவதன் காரணமாக புதிய பதவிகளை ஏற்படுத்திக் கொள்ளல் மற்றும் பதவியணியை இணைப்புச் செய்துகொள்வது அத்தியாவசியமாகின்ற போதிலும், அமைச்சின் வளவில் காணப்படுகின்ற இடவசதிகள் போதியளவானதாக இல்லாமை காரணமாக மேற்படி தேவைப்பாடுகளை நிறைவேற்றிக் கொள்ள முடியவில்லை.

மேலும் தேசிய வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்குத் தேவையான காணிகளை குடியிருப்புக்களை உருவாக்கப் பொருத்தமான இடங்களிலிருந்து போதியளவில் இனங்காணல் மற்றும் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட குடியிருப்புக்களுக்கு குடிநீா் மற்றும் பிரவேசப் பாதை வசதிகளை செய்துகொடுப்பதற்கான குறிப்பான பொறிமுறை இல்லாமையும் அமைச்சு எதிர்நோக்கிய முக்கிய சவால் ஒன்றாகும்.

## 2018 ஆம் ஆண்டில் கலாசார அலுவல்கள் விடயம் உரித்தான அமைச்சுக்கள்

## 1.2 கலாசார அலுவல்கள் பிரிவின் கீழ் உரித்தாகும் பிரதான விடயப்பரப்புகள்

| உரித்தான அமைச்சு | காலஎல்லை | வர்த்தமானியில் வெளியிட்ட திகதியும், வர்த்தமானப் பத்திரிகையும் |
|---|---|---|
| உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு | 2015.09.21 –2018.05.11 | 2015.09.21 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1933/13 ஆம் இலக்க வர்த்தமானிப் பத்திரிகை |
| உயர் கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு | 2018.05.12 – 2018.11.04 | 2018.05.12 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2070/56 ஆம் இலக்க வர்த்தமானிப் பத்திரிகை |
| கலாசார, உள்ளக அலுவல்கள் மற்றும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சு | 2018.11.05 – 2018.12.27 | 2018.11.05 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2096/17 ஆம் இலக்க வர்த்தமானிப் பத்திரிகை |
| வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு | 2018.12.28 | 2018.12.28 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2103/33 ஆம் இலக்க வர்த்தமானிப் பத்திரிகை |

1. கலாசார அலுவல்கள் விடயம்
2. தேசிய மரபுரிமை விடயம்

**கலாசார அலுவல்கள் விடயப்பரப்பின் கீழ் அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்கள்**

1. கலாசார அலுவல்கள் திணைக்களம்
2. தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்
3. ரவர் ஹோல் மன்றம்
4. இலங்கை கலைக் கழகம்

**தேசிய மரபுரிமை விடயத்தின் கீழ் அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்கள்**

1. தேசிய நூதனசாலைகள் திணைக்களம்
2. தொல்பொருளியல் திணைக்களம்
3. காலி மரபுரிமை மன்றம்
4. தேசிய ஆவணக்காப்பகத் திணைக்களம்
5. மத்திய சுற்றாடல் நிதியம்
6. ஜனகலா நிலையம்
7. பகிரங்க அரங்காட்டல் சபை
8. அபேகம

## 1.3 கலாசார அலுவல்கள் பிரிவின் கீழ் இயங்கிவருகின்ற நிறுவனங்கள் பற்றிய அறிமுகம்

### 1. தொல்பொருளியல் திணைக்களம்

ஒட்டுமொத்த தொல்பொருளியல் மரபுரிமைகளையும் நல்ல முறையில் முகாமைத்துவம் செய்து எதிர்கால சந்ததியினருக்கு கையளிப்பதற்காக, இலங்கையில் தொல்பொருளியல் மரபுரிமை முகாமைத்துவத்தின் பொறுப்பைக் கொண்டுள்ள உச்சளவான நிறுவனம் மற்றும் அதன் பிரதான ஒழுங்குறுத்தும் நிறுவனம் என்ற வகையில் தொல்பொருளியல் திணைக்களம் செயற்பட்டு வருகின்றது. இலங்கையில் தொல்பொருளியல் மரபுரிமைகளை இனங்காணல், இலங்கையில் அசையும் மற்றும் அசையாத தொல்பொருளியல் மரபுரிமைகளை ஆவணமயப்படுத்தல், தொல்பொருளியல் மரபுரிமைகளை ஒழுக்க ரீதியாக பேணுகை, பராரிப்புச் செய்து பேணிவருதல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகைள மேம்படுத்தல், தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தை அமுல்படுத்தல், கலாசார ஆதசன் சட்டத்தை அமுல்படுத்தல், தொல்பொருளியல் இடங்கள் மற்றும் நினைவுச் சின்னங்களை பொது மக்களுக்குச் சமர்ப்பித்தல் மற்றும் பல்வேறு அபிவிருத்திக் கருத்திட்டங்களை அமுல்படுத்தும் போது தொல்பொருளியல் பெறுமானங்களைக் கொண்ட இடங்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்பு பற்றிய பாதிப்பு மதிப்பீட்டு ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வது இந்த நிறுவனத்தின் முக்கிய பணிகளாகும்.

### 2. தேசிய ஆவணக்காப்பகத் திணைக்களம்

கலாசார உரிமையின் ஒரு பகுதியாக அரசாங்க ஆவணங்களை முறையாக முகாமைத்துவம் மற்றும் பேணுகைக்காக தேசிய ஆவணக்காப்பக சட்டம் மற்றும் அது சம்பந்தப்பட்ட சட்டங்கள், ஒழுங்குவிதிகளை அமுல்படுத்தல், நிரந்தர பேணுகைக்கு அரச ஆவணங்கள் மற்றும் முக்கியமான தனியார் ஆவணங்களை பெற்றுக் கொள்ளல், குறித்த சட்டங்கள், விதிகளுக்கு அமைய பாரம்பரிய மற்றும் பாரம்பரியமல்லாத அரச ஆவணங்களின் முகாமைத்துவம் மற்றும் பேணுகை, உரிய சட்டரீதியான வைப்புக்கு பத்திரிகை மற்றும் வெளியீடுகளின் பிரதிகளைப் பெற்றுக் கொள்ளல், அரசாங்க நிருவாக செயன்முறையின் போது மற்றும் மக்களின் ஆராய்ச்சிக்கான வைப்பு ஆவணங்களிலிருந்து தகவல்களை பெற்றுக் கொள்ள வசதி செய்வது தேசிய ஆவணக்காப்பகத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. 1973 இன் 48 ஆம் இலக்க தேசிய ஆவணக்காப்பகச் சட்டம் மற்றும் 1981 இன் 30 ஆம் இலக்க தேசிய ஆவணக்காப்பக (திருத்த)ச் சட்டத்திற்கு அமைய அரசாங்க ஆவணங்களின் பொறுப்பை பேணிவருதல் மற்றும் அவற்றின் பௌதீக நிலைமையை பாதுகாத்தல், ஆராய்ச்சி மற்றும் பரிசீலனை நடவடிக்கைகளுக்கு அவற்றைப் பெற்றுக் கொடுத்தல், அரச நிறுவனங்களின் ஆவணங்களை ஆய்வு செய்தல், சனாதிபதி மிகைஆவணக்காப்பக நிருவாக மற்றும் பரிசீலனை சேவை, இந்நாட்டில் வெளியிடப்படுகின்ற வெளியீடுகளின் சட்டரீதியான வைப்புக்கான களஞ்சியமாகச் செயற்படல், ஆவண முகாமைத்துவம் மற்றும் பேணுகை பற்றிய பயிற்சிச் செயலமர்வுகளை நடாத்தல், அச்சகம், அச்சிடுவோர் மற்றும் வெளியீட்டாளர்கள் மற்றும் பத்திரிகைகள் தொடர்பிலான கட்டளைச் சட்டங்களை அமுல்படுத்தல் மற்றும் தனியார் ஆவணக் சேகரிப்பை பேணுகை மற்றும் சூசிகையிடல் ஆகிய பணிகள் இதன் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

### 3. தேசிய நூதனசாலைகள் திணைக்களம்

சுபிட்சமிக்க எதிர்காலத்திற்காக தேசிய மரபுரிமைகளை பேணுகை, காட்சிப்படுத்தல் மற்றும் பிரச்சாரம் செய்வதற்கு கலாசார மற்றும் இயற்கை மரபுரிமைகளுக்கு உரித்தான வளங்களை விஞ்ஞான ரீதியாக மற்றும் முறையாகப் பாதுகாத்தல் மற்றும் பொது மக்களின் மதிப்பீட்டு கல்வி, ரசனைக்காக சமர்ப்பித்தல் தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. 1877 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்ட இந்தத் திணைக்களமானது பூரணமான நூதனசாலை சேவையை நாட்டுக்குப் பெற்றுக் கொடுத்தல், வரலாற்றுக்கு முன்னரான வரலாறு, மனிதஇனம் பற்றிய விஞ்ஞானம், மனிதவியல், தாவரவியல், உயிரியல், நுண்ணியல், புவியியல், மண்ணியல் போன்ற பல்வேறு துறைகள் சம்பந்தமான நூதன அம்சங்கள் மற்றும் மாதிரிகளை சேகரித்தல் மற்றும் பாதுகாத்தல், அத்துறைகளில்

ஆராய்ச்சிகளை நடாத்தல் மற்றும் ஆராய்ச்சி ஆவணங்களை பிரகடனம் செய்தல், விஞ்ஞானிகள் மற்றும் பயிலுனர்களின் உபயோகத்திற்காக ஸ்பொலியா செலனிகா எனும் ஆராய்ச்சித் தொகுப்பு மற்றும் வேறு சஞ்சிகைகள் மற்றும் தனியொரு விடயம் பற்றிய தொகுப்புக்களை வெளியிடல், நாட்டின் வரலாறு, கலைத்திறமைகள் மற்றும் இயற்கை விஞ்ஞானம் சம்பந்தமான அறிவை பிரபல்யப்படுத்துவதற்கான விரிவுரைகள், கண்காட்சிகள் மற்றும் கருத்தரங்குகள் போன்றவற்றை உள்ளடக்கிய கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல், அரிதான நூல்களை மீள் அச்சிடல் போன்ற நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள செயற்பட்டு வருகின்றது.

## 4. கலாசார அலுவல்கள் திணைக்களம்

இலங்கை மக்களை ஆன்மீக ரீதியாக அபிவிருத்தியடைந்து உணர்வுப்பூர்வமான மனிதர்களாக மாற்றியமைக்கும் ஒரே எதிர்பார்ப்பை நிறைவு செய்துகொள்வதற்காக இலங்கைக் கலாசாரத்தைக் கட்டியெழுப்பும் நோக்கத்துடன், இலங்கைத் தனித்துவத்தைக் கொண்ட கலை, இலக்கிய மற்றும் கலாசார நடவடிக்கைகளை பேணுகை, மேம்படுத்தல், விஸ்தரித்தலுக்கான நிகழ்ச்சித்திட்டங்களைத் தயார் செய்தல் மற்றும் அமுல்படுத்தவது இந்தத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. கலாசார அலுவல்களை வினைத்திறனும், விளைதிறனும்மிக்கவாறு அமுல்படுத்துவற்கான திட்டங்களைத் தயார் செய்தல் மற்றும் அமுல்படுத்தல், இலக்கியம் மற்றும் கலையைப் பேணுகை, மேம்படுத்தல் மற்றும் பிரச்சாரம் செய்வது தொடர்பிலான கருத்திட்டங்களை அமுல்படுத்தல், எழுத்தாளர் மற்றும் கலைஞரை கலாசாரத்தின் உறுப்பினர்களாக கருதி, அவர்களுக்கு உதவி வழங்குதல் மற்றும் ஆக்கத்திறனுக்குத் தேவையான உதவியை வழங்குத், மொழி இலக்கியம் மற்றும் வரலாறை கலாசார அடிப்படையாகக் கருத்தி பேரகராதி, அகராதி மற்றும் மஹாவம்சத்தை தயார் செய்தல் மற்றும் எழுத்தாளர்களை ஊக்குவிப்பதற்கான நூல்களை தயார் செய்தல், புத்தகங்களைக் கொள்வனவு செய்தல், கைப்பிரதிகளுக்கான போட்டிகளை நடாத்தல், அரிதான புத்தகங்களை மீள் அச்சிடும் நிகழ்ச்சித்திட்டங்களைத் தயார் செய்தல் மற்றும் அமுல்படுத்தல், இலங்கையை பல் கலாசார நாடாகக் கருதி சகல உப கலாசாரங்களுக்கும் நியாயமான முறையில் அவர்களின் கலை மற்றும் கலைத் திறன்களை பேணுகை, மேம்படுத்தல் மற்றும் பிரச்சாரத்துக்கான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல:, இலங்கை கற்புல மற்றும் கற்புலனற்ற கலாசார அம்சங்களுக்கு புத்தெழுச்சியூட்டி, அவற்றை சமூகத்தின் சகல துறைகளிலும் பிரவேசிக்கச் செய்யும் வகையிலான நிகழ்ச்சித்திட்டங்களைத் தயார் செய்தல் மற்றும் அமுல்படுத்துவதன் மூலம் நற்பண்புகள் மிக்கதொரு சமூகத்தைக் கட்டியெழுப்ப நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

.

## 5. மத்திய சுற்றாடல் நிதியம்

இலங்கையின் மரபுரிமையை சர்வதேச விந்தையாக மாற்றியமைக்கும் பொருட்டு, தேசிய மற்றும் சர்வதேச ரீதியிலும் முக்கியத்துவமிக்க உலக மரபுரிமைப் பிரதேசங்களிலுள்ள நினைவுச் சின்னங்களை தொல்பொருளியல் திணைக்களத்தின் அங்கீகாரம் மற்றும் கண்காணிப்பின் கீழ் அகழ்வு செய்து பேணுவதும், மேற்படி தொல்பொருளியல் பிரதேசங்களில் சுற்றுலா உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதையும் நோக்காகக் கொண்டு அதற்கான நிதியைச் சேகரிப்பதற்காக 1980 இன் 57 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் மூலம் மத்திய சுற்றாடல் நிதியத்திற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. மேற்படி நோக்கங்களை நிறைவேற்றிக் காள்ளல் மற்றும் இலங்கையின் சமய மற்றும் வரலாற்று ரீதியில் முக்கியத்துவமிக்க காணிகள், நினைவுச்சின்னங்களை பாதுகாப்பதற்காக நாட்டில் தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் தொல்பொருளியல் ஆராய்ச்சி, அகழ்வு, பேணுகை மற்றும் நிலஅழங்காரம் செய்தல், அவற்றில் சுற்றுலா வசதிகளை மேம்படுத்துவதும் மேற்கொள்ளப்படுகின்றது. அத்துடன் கண்டுபிடிக்கப்பட்ட புதிய அறிவு மற்றும் மத்திய கலாசார நிதியத்தின் செயற்பணி பற்றி விளக்கமளிப்பதற்கு சுற்றுலா தகவல் நிலையம், நூதனசாலை பேணிவரப்படுவதுடன், பாடசாலை மாணவர்கள், பல்கலைக் கழக மாணவர்கள் மற்றும் அறிவைத் தேடும் ஆராய்ச்சியாளர்களுக்கான செயலமர்வுகள் மற்றும் விரிவுரைகளும் ஒழுங்கு செய்யப்படுகின்றன.

## 6. இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனம்

1980 இன் 45 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட 1971 இன் 47 ஆம் இலக்க சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனமானது, இந்நாட்டின் சினிமாத்துறையின் நிருவாகம் மற்றும் ஒழுங்குறுத்தலுக்கெனக் காணப்படுகின்ற ஒரே அரச நிறுவனமாகும். புதிய தொழில்நுட்ப முறையியல்களைப் பின்பற்றி திருப்திகரமான, பொறுப்புக்களை இனங்கண்ட, நட்புறவான சேவையை வாடிக்கையாளர்களுக்குப் பெற்றுக் கொடுத்து ஆக்கத்திறனுக்குத் தேவையான கல்வி, ஊக்குவிப்பு மற்றும் நலன்புரி வசதிகளைப் பெற்றுக் கொடுத்து தரமான சினிமா கலாசாரத்தை உருவாக்குவதற்கு இந்த நிறுவனம் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது. 1999.06.17 ஆம் திகதிய அப்போதைய நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் செயலாளர், திரு டிக்சன் நிலவீரவினால் வெளியிடப்பட்ட தேசிய திரைப்படக் கொள்கை மற்றும் அது பற்றிய வழிகாட்டல்களின் மூலம் தரைப்படங்களை விநியோகிப்பதானது 05 பிரிவுகளின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது. 2018.12.31 ஆம் திகதியில் நாடு முழுவதிலும் 188 சினிமா திரையரங்குகள் இயங்கிவருகின்றன.

## 7. காலி மரபுரிமை மன்றம்

இலங்கையின் மிகச் சிறந்த கலாசார சுற்றுலா நகரமாக உயிரோட்டம்மிக்க உலக மரபுரிமையான காலி கோட்டை உள்ளது. வரலாற்று கலாசார நிலையம் மற்றும் தொல்பொருளியல் முக்கியத்துவமிக்க பிரதேசமாக காலிக் கோட்டையை பேணுகை மற்றும் சிறந்த சுற்றுலா நகரமாக மேம்படுத்தும் நோக்கத்துடன் 1994 இன் 07 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட காலி மரபுரிமை மன்றம் சட்டவாக்க நிறுவனமொன்றாகும். கோட்டை சுவர்கள் மற்றும் கட்டிடங்களைப் பேணுகை, காலிக் கோட்டையில் இனங்களுக்கு இடையே அன்னியோன்ய ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தல், வரலாற்று முக்கியத்துவமிக்க தன்மையைப் பாதுகாத்தல் பற்றி அறிவுறுத்தல், மனப்பாங்கினை விருத்தி செய்தல், பௌதீக அபிவிருத்தி, சுற்றுலா வசதிகளை ஏற்படுத்தல் மற்றும் மேம்படுத்தல், சுற்றுலாசார் கவரும் இடங்களை ஏற்படுத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல், விருந்துபசாரத்தை மேம்படுத்தல், காலிக் கோட்டையிலுள்ள வீட்டு உரிமையாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல், காலிக் கோட்டையில் இனங்களுக்கு இடையே சமஅந்தஸ்தை மேம்படுத்தல், பாரம்பரிய வாழ்வாதாரங்களை மேம்படுத்தல், சுற்றுலாத்துறையுடன் சம்பந்தப்பட்ட செயற்பாடுகளை முறைப்படுத்தல், நுகர்வோரின் பெறுமானங்களை மேம்படுத்தல், வினைத்திறன்மிக்க சேவையைப் பெற்றுக் கொடுத்தல் போன்றன இதன் பணிகளாகும்.

## 8. அபே கம

இலங்கை வாழ் மக்களின் வாழ்க்கையின் முக்கிய அம்சமொன்றான கிராமிய கலாசாரம், கலை, உள்நாட்டு சம்பிரதாயங்கள் மற்றும் அதன் பல்லினத்தன்மை, மரபுரிமைகளை கற்புலனாக வெளிப்படுத்துவதும், உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுப்பயணிகள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு இலங்கைக் கிராமத்தின் பல்கலாசார பல்லினத்தன்மையை ஆக்கபூர்வமான அனுபவமொன்றாக சமர்ப்பித்தல் மற்றும் அதன் மூலம் கிராமம் பற்றிய கலாசார ரீதியான அறிவை மேம்படுத்துவது இதன் நோக்கமாகும்.

இன்று கிராமம் மற்றும் கிராமிய மக்களின் வாழ்க்கையானது மாற்றமடைந்துள்ளதை அடுத்து மாற்றமடைகின்ற கிராமியத்தன்மை மற்றும் அதன் பண்புகள், அதற்கே தனித்துவமிக்க ஏனைய அம்சங்கங்கள் தீவிரமாக வீழ்ச்சியடைந்துவருவதுடன், அதற்கான தீர்வாக பத்தரமுல்லை, அபேகம வளவு 2013.11.13 ஆம் திகதி ஒரு கிராமத்தின் மாதிரியமைப்பாக ஆரம்பிக்கப்பட்டது.

இதன் பின்னர் 2013.11.13 ஆம் திகதி முதல் 2015.12.01 ஆம் திகதி வரை இலங்கை கைப்பணிக் கைத்தொழில் பேரவையின் கீழ் நிருவகிக்கப்பட்டு வந்த அபேகம வளவு 2015.12.01 ஆம் திகதி முதல் 2016.06.ஹ8 ஆம் திகதி வரை கல்வி அமைச்சின் கீழ் நிருவகிக்கப்பட்டது. இந்நிலையை மாற்றியமைக்கும் சந்தர்ப்பம் 2016.06.18 ஆம் திகதி முதல் மத்திய சுற்றாடல் நிதியத்திற்குக் கிடைத்தது. அதற்காக பத்தரமுல்லை அபேகம வளவின் மரபுரிமையை பேணப்பட்ட நிலையமாக மீளமைக்கவும்,

சுற்றுலா மேம்படுத்தல் பணியை விளைதிறன்மிக்க செயற்பாட்டு நிலையமாக ஒழுங்குபடுத்துவதற்கும் தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## 9. இலங்கை கலைக் கழகம்

நாட்டின் மரபுரிமையொன்றான உள்நாட்டுக் கலையை போசித்து எம்முடைய கலைஞர் குழுவை உருவாக்குவதன் மூலம் தேசிய பெருமையை மேம்படுத்தும் நோக்கத்துடன் 1952 இன் 18 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தினால் இலங்கை கலைக் கழகம் தாபிக்கப்பட்டது. பிரதான கலைத்துறைகளை நோக்காகக் கொண்டு இதன் விடயங்களை அமுல்படுத்துவதற்கான துணைக் குழுக்கள் ஆறு தாபிக்கப்பட்டுள்ளன. கலை நடவடிக்கைகளை மேம்படுத்தல், பேணுகை மற்றும் அபிவிருத்திக்குத் தேவையான துணைக்குழுக்களை நியமனம் செய்து அவற்றுக்குத் தலைமைத்துவம் வழங்குவது மற்றும் வழிகாட்டுவது, இலக்கியம், நாடகம், இசை, நடனம், சித்தியரம் ஆகிய துணைக் குழுக்கள் மூலம் நாடளாவிய ரீதியில் நடவடிக்கைகளை ஒழுங்கு செய்தல், தேசிய மட்டத்திலான மதிப்பீடுகளுக்கு கலைஞர்களை கொண்டுவருதல் மற்றும் அவர்களை தேசிய மட்டத்தில் அறிமுகம் செய்துவைப்பதன் மூலம் குறித்த துறையில் உயர் மட்டங்களில் தாபித்தல், கலைகளின் அந்தஸ்தை மேம்படுத்தல், இலங்கைக்கே தனித்துவமான கலைசார் கைத்தொழிலை மேம்படுத்தல், கலை நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்ட வேறு திணைக்களங்கள், நிறுவனங்கள், தொண்டர் அமைப்புக்களுடன் இணைந்து நடவடிக்கை மேற்கொள்ளல், பண்பார்ந்த சமூகமொன்றை உருவாக்குவதற்கு உகந்த கலாசார சூழலைக் கட்டியெழுப்புவது இதன் பிரதான பணியாகும்.

## 10. ரவர் ஹோல் மண்டப மன்றம்

இலங்கையில் தேசிய நாடக நிலையமாக மாறி தரமான நாடம் மற்றும் நடிப்புக் கலை கலாசாரத்தை உருவாக்குவதில் முன்னோடி நிறுவனமாக மாறும் நோக்கத்துடன் இலங்கையில் தரமான நாடகம் மற்றும் நடிப்புக் கலை கலாசாரத்தை உருவாக்குவதற்கு மற்றும் மேம்படுத்துவதற்குப் பங்களிப்புச் செய்து அதற்குத் தேவையான அறிவு, உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கி நூதன உலக நாடக மற்றும் நடிப்புக் கலையின் பயன்பாட்டின் புதிய அனுபவங்கள், தொழில்நுட்பம் மற்றும் அறிவை குறைவின்றிப் பெற்றுக் கொள்ளத் தேவையான புதிய வழிகளை உருவாக்கிக் கொடுத்து நாடகம் மற்றும் நடிப்புக் கலை ஆக்கக்கலைஞர்களை ஊக்குவித்து நாட்டின் அபிவிருத்திக்கும், மனித இனத்தின் நலனுக்கும் ஆக்கத்துறையில் ஈடுபடுவதற்கு அவர்களை ஊக்குவிப்பது மேற்கொள்ளப்படுகின்றது.

## 11. பகிரங்க அரங்காட்டற் கட்டுப்பாட்டுச் சபை

சுதந்திரமான மற்றும் சிறந்த ஆக்கரீதியான சூழலைக் கட்டியெழுப்புவதற்கு மற்றும் திரைப்படம், நாடகம், இசை மற்றும் பல்சுவைக் கண்காட்சிகளுக்கு வகைப்படுத்தல் சான்றிதழ்களை வழங்குதல் மற்றும் கலைத்துறையின் அபிவிருத்திக்கு வினைத்திறன்மிக்க சேவையைப் பெற்றுக் கொடுத்தல், சமூகப் பொறுப்பு, ஆக்கம் தொடர்பிலான சுதந்திரம், மக்களின் நலன்புரி போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு மக்களின் கண்காட்சிக்கான நிகழ்வுகள் மற்றும் கலை ஆக்கங்களை சமர்ப்பிப்பதை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் பகிரங்க அரங்காட்டற் சபை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இலங்கை சமூகத்திற்குத் தாக்கம் செலுத்துகின்ற பகிரங்க அரங்காட்டல் தொடர்பில் உள்நாட்டுத் திரைப்படம், நாடகம் மற்றும் சகல மக்கள் காட்சிப்படுத்தல்கள் ஆகிய விடயப்பரப்புக்கள் உள்ளடங்கும். இதன் போது மேற்படி விடயப்பரப்புக்கள் பகிரங்க அரங்காட்டற் சபை சட்டத்தின் கீழ் மக்கள் காட்சிக்கு உகந்ததா எனும் நோக்குக்கு அமைய பரிசீலிக்கப்படுகின்றது. அதற்கமைய பகிரங்க அரங்காட்டற் சபையினால் உகந்தவாறு மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் பரிசோதித்து வகைப்படுத்துவது இன்றைய பிரதான பணியாக குறிப்பிடப்படுகின்றது.

## 12. ஜனகலா நிலையம்

இலங்கையின் மனங்கவர் மரபுரிமைகள் மற்றும் பாரம்பரிய கலை முறைகளைப் பாதுகாத்து எதிர்கால சந்ததியினருக்கு உரித்தாக்கிக் கொடுப்பதற்கு இலங்கையின் மனங்கவர் மரபுரிமைகள் பற்றிய ஆராய்ச்சி, பேணுகை, பாரம்பரிய கலைகளைப் பாதுகாத்தல், அந்த அறிவை எதிர்கால சந்ததியினருக்குக் கொண்டு செல்லல், எதிர்காலத்தில் கலைஞர்களை உருவாக்கத் தேவையான அறிவு, சூழலை கட்டியெழுப்பி உலகம் முழுவதிலும் இலங்கையின் கலைகளை பிரபல்யப்படுத்துவது ஜனகலா நிலையத்தின் நோக்கமாகும். இலங்கையின் பாரம்பரிய மற்றும் சம்பிரதாயபூர்வமான கலைசார் மரபுரிமைகளை இனங்காணல் மற்றும் பேணுகை, மேற்படி மரபுரிமைகளை எதிர்கால சந்ததியினருக்கு உரித்தாக்கிக் கொடுக்கத் தேவையான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல், மேற்படி மரபுரிமைகள் தொடர்பில் ஆக்கபூர்வமான தொழில்வல்லுனர்களை உருவாக்கத் தேவையான அறிவு மற்றும் அதற்குத் தேவையான சூழலை கட்டியெழுப்பதல், மேற்படி மரபுரிமைகளின் அடிப்படைகளை வலுவூட்டல் மற்றும் அவற்றில் ஈடுபட்டுள்ள கலைஞர்களுக்குப் பெருமை சேர்த்தல், இலங்கையின் மரபுரிமைகள் பற்றி உலகை அறிவுத்துவது இதன் முக்கிய பணிகளாகும். கீழைத்தேய இசை, நடனம், பாட்டு, மக்கள்சார்ந்த இசை, நடனம், மலைநாட்டு, கரையோரப் பிரதேச மற்றும் சப்பிரகமுவா (சித்திரம், அரக்கு) போன்ற முழுநேர அழகியற் கலை பாடநெறிகள் தற்போது ஜனகலா நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 13. ரன்மிஹிதென்ன தேசிய ரெலி சினிமா பூங்கா

கலை மூலம் போசிக்கப்பட்டதொரு சனசமூகத்திற்காக மக்களுக்கு சாதகமான, சகலவித கலைகளினாலும் போசிக்கப்பட்ட அபிவிருத்திக்கு நெகிழ்வுமிக்க கலாசாரமொன்றை எதிர்கால சந்ததிக்கு உரித்தாக்கிக் கொடுப்பது இதன் நோக்கமாகும். அதற்காக ரூபாவாஹினி அல்லது வேறு ஊடகங்கள் மூலம் ஒளிபரப்புச் செய்யப்படுகின்ற இலங்கைக் கலைக் கலாசாரம், நாடம், சினிமா, தொலைக்காட்சி ஆக்கங்கள் மற்றும் வணிக நிகழ்ச்சிகளை மேம்படுத்தல், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கலைஞர்களுக்கு, தயாரிப்பாளர்களுக்கு, சினிமா, நாடம், தொலைக்காட்சி ஆக்கங்கள் மற்றும் வணிக நிகழ்ச்சித் தயாரிப்புக்குத் தேவையான ஏனைய வசதிகளைப் பெற்றுக் கொடுப்பது, இந்த சினிமா பூங்காவுக்கு உரித்தான வளங்களை கல்விப் பயிற்சி நிகழ்ச்சிகள், ஆராய்ச்சிகள், ஆய்வு நடவடிக்கைகள், நிபுணத்துவ அறிவு மற்றும் தொழில்நுட்ப அறிவை பரிமாற்றிக் கொள்ளும் செயலமர்வுகள் போன்றவற்றுக்குப் பெற்றுக் கொடுப்பது, மேலே குறிப்பிடப்பட்ட பிரதான குறிக்கோளுக்கு தடை ஏற்படாதவாறு ரசிகர்கள், சுற்றுப்பயணிகளை கவரும் நிலையமாக மற்றும் வருமானத்தை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல் ஆகிய பணிகளை நிறைவேற்றுவதற்காக ரன்மிஹிதென்ன தேசிய ரெலி சினிமா பூங்கா மன்றம் என்ற பெயரில் சட்டமொன்று தாபிக்கப்பட்டு இது அமைத்துருவாக்கப்பட்டுள்ளது.

# 1.4 கலாசார அலுவல்கள் பிரிவு – அமைப்பு திட்டம் 2018




கண. - கணக்காளர்
உ.க - உள்ளக கணக்காய்வாளர்
உ.ப.தி - உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்)
மொ.பெ - மொழி பெயர்ப்பாளர்

அ.உ - அபிவிருத்தி உத்தியோகத்தர்
நி.உ - நிர்வாக உத்தியோகத்தர்
க.மே.உ - கலாசார மேம்பாட்டு உத்தியோகத்தர
ப.பட் - பயிற்சி பெற்ற பட்டதாரி

உ.க.மே.உ - உதவி கலாசார மேம்பாட்டு உத்தியோகத்தர
ப.வ. - பட வரைஞர்
அ.மு.உ - அரச முகாமைத்துவ உதவியாளர்
மு.உ. - முகாமைத்துவ உதவியாளர்

அ.உ. - அலுவலக உதவியாளர்
க.நி.கா. - கலாசார நிலைய காவலாளி
தொ.உ. - தொழில்நுட்ப உத்தியோகத்தர்
உ.செ. - உதவிச் செயலாளர்

# 2. நிர்வாக விடயங்கள்

**பதவியணியினர்**

வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் அனைத்து நிர்வாகப் பணிகள் மற்றும் அதன் மேற்பார்வை வழிமுறைகளை நிர்வாகத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகிறது..

**தலைமை அலுவலகம்**

**கலாசார அலுவல்கள் பிரிவு**

| தொ. எண் | பதவி | பெயர் | சேவை காலம் |
|---|---|---|---|
| 01. | செயலாளர் | திரு.டீ. சுவர்ணபால | 2015.09.09 இருந்து 2018.05.01 வரை |
| 02. | செயலாளர் | திரு. ஜே.ஜே.ரத்னசிறி | 2018.05.01 இருந்து 2018.11.02 வரை |
| 03. | செயலாளர் | திருமதி தர்சனா சேனானாயக்க | 2018.11.05 இருந்து 2018.12.27 வரை |
| 04. | செயலாளர் | திரு. பேனாட் வசந்த | 2018.12.28 இருந்து |
